Reg. No. M. 1776.

செந்தமிழ்ச்செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ௨ } துரோதன மார்கழி௴ { பரல் ௧௨

உள்ளுறை

சடாதலைப் பிராட்டியார் திருமணப் படம்
இறையனார் அகப்பொருள் ௫௦௫
கண்ணகி கற்புமாண்பு ௫௦௯
நம்பியாண்டார் நம்பிகள் ௫௧௫
சேக்கிழார் பெரியபுராணம் ௫௧௧
சிவதலங்களின் திருப்பெயர் வரலாறு ௫௨௧
அகம் புறம் ௫௪௧
சடாதலைப் பிராட்டியார் திருமணம் ௫௪௪
தமிழ்நிதி ௫௪௭
குறிப்புக்கள் ௫௫௦

The South India Saiva Siddhanta Works
Publishing Society, Tinnevelly, Ltd.

ஆண்டுக் கையொப்பம் ரூ 3. தனிப்படி அணா 6

All Rights Reserved

வேண்டுகோள்

எல்லாம் வல்ல இறைவனருளால் நமது 'செல்வி'யின் மூன்றாம் சிலம்பு இதனோடு முடிவு பெற்றது. இனி, அடுத்த இதழ் முதல் நான்காம் சிலம்பு தொடங்குகிறது. முன்னையினும் சிறந்த நிலையில் படங்களுடனும், சிறந்ததும் எளியதுமான கட்டுரைகளுடனும் செல்வி திகழுவள். இதுவரை நமது அரும்பெறற் செல்வியினைப் போற்றிவரும் அன்பரனைவரும் இனியும் தொடர்ந்து ஆதரித்து வருவதோடு தங்கள் தங்கள் நண்பர்களையுந் தூண்டுமாறு வேண்டுகிறோம். அன்பர்கள் அடுத்த வருடக் கையொப்பத் தொகையை இவ்விதழ் கிடைத்த 10 நாட்களுக்குள் மணியார்டர் மூலம் அனுப்புமாறும் அல்லது அடுத்த முதலாவது இதழை வி. பி. பியில் அனுப்புமாறு இத்துடன் வரும் ஆர்டர் கார்டில் எழுதி யனுப்புமாறும் வேண்டுகிறோம். முன் பணம் அனுப்பினால் வி. பி. செலவு மிச்சமாகும்.

மலாய் நாட்டு நமது கையொப்ப நண்பர்களுக்கு வி. பி. பியில் அனுப்பக்கூடாமையால் வழக்கம்போல் ரூ 3—8—0 யும் முன் பணமாக அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

செந்தமிழ்ச் செல்வி

முதற் சிலம்பு	பக்கங்கள் சகூ	ரூ 3 8	
இரண்டாவது சிலம்பு	,, ருசகூ	ரூ 3 8 0	
மூன்றாவது சிலம்பு	,, ருருஉ	ரூ 3 8 0	
நான்காம் ஆண்டுக் கையொப்பம்		ரூபா மூன்று	
மலாய் நாடு முதலிய இடங்கட்கு		ரூபா மூன்றரை	

5-பங்குகட்குக் குறையாத நமது கழகப் பங்காளிகட்கும், மாணவர்கட்கும் வருடக் கையொப்பம் ரூ 2 8 0

பிரபஞ்ச உற்பத்தி

வேதம், ஆகமம், ஸ்மிருதி, புராணம், சாத்திரம், கலைகள் முதலிய எல்லாவற்றினின்றும் அரிய விஷயங்கள் அடங்கியது.

விநாயகர், சுப்பிரமணியர், சிவபெருமான், மகாவிஷ்ணு, தசாவதாரம், லக்ஷ்மி, நடராஜர் முதலிய பல மூர்த்திகளின் அழகிய ஆப்டோன் படங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

நான்கு காண்டங்கள்

1 உலகோற்பத்திகாண்டம் 3 மனிதோற்பத்திகாண்டம்
2 தேவோற்பத்திகாண்டம் 4 சமயோற்பத்திகாண்டம்

கிளேஸ் காகிதம், அழகிய பொன்கிலிட்டுக் கட்டடம் ரூபா 4.

செந்தமிழ்ச்செல்வி

திங்கள் வெளியீடு

மூன்றாஞ் சிலம்பு

இதழாசிரிய கூட்டத் தலைவர்:

கா. சுப்பிரமணியபிள்ளை,

எம். ஏ., எம். எல்., அட்வகேட்.

திருநெல்வேலி தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்
லிமிடெட்

இரக்தாட்சி - குரோதன

The South India Saiva Siddhanta Works
Publishing Society, Tinnevelly Ltd.
Tinnevelly & Madras.

திருமணவூர் முனிசாமி முதலியார் அண்டு ஸன்ஸ்,
சிவகாமி விலாச அச்சுக்கூடம்,
சென்னை.

‘செந்தமிழ்ச் செல்வி’ இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

(Editorial Board Members)

தலைவர்

1. திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், M.A., M.L.,
அட்வகேட், நியாய கலாசாலைப் பேராசிரியர், சென்னை

---

2. ,, ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள், B.A. L.T.,
பாடசாலை டெப்டி இன்ஸ்பெக்டர்,
வாலாஜாபாத்.

3. ,, ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர், ஹீபர் கலாசாலை,
திருச்சிராப்பள்ளி.

4. ,, துடிசைக்கிழார் அ. சிதம்பரனாரவர்கள்,
போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர், ஹரூர்.

5. ,, M. V. நெல்லையப்ப பிள்ளையவர்கள், B.A.,
பென்ஷன் தாசில்தார், சிந்துபூந்துறை.

6. ,, பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள்,
மகிபாலன்பட்டி.

7. ,, T. S. கந்தசாமி முதலியாரவர்கள், B. A.,
வக்கீல், சாத்தூர்.

8. ,, ஆ. கார்மேகக் கோனாரவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர், அமெரிக்கன் கல்லூரி,
மதுரை.

VOL. III
1925 - 1926

(All Rights Reserved)

உள்ளுறை

[* இக்குறியிடப்பட்ட பொருள்கள் மூன்றாஞ் சிலம்பில் முடிவுபெறாது நான்காவது சிலம்பில் தொடர்புபெறுவன.]

அகம் புறம்:—க. ப. சந்தோஷம் அவர்கள், B. A., L. T. ௨௮௪, ௩௩௭, ௪௨௯, ௪௭௫, ௫௪௧

அஞ்செழுத்துண்மை:—L. உலகநாத பிள்ளையவர்கள் ௨௭

அரிசியும் தவிடும் ௨௱௮

* அறிவுதயம்:—S. A. திருமலைக்கொழுந்துப் பிள்ளை யவர்கள் B.A. ௪௯௩

அன்பு:—கடையம் அ. ஈசுரமூர்த்திப்பிள்ளை யவர்கள் ௨௨

அன்பு அருள் என்னும் சொற்களின் ஆராய்ச்சி:—மா. வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள், B A, ௯௧

அன்பும் கடமையும்:—'குறுமுடியான்' ௧௭௩

ஆசுவயுஜமும் ஐப்பசியும் ஒரேமாதம்:—கா. முத்துக் கருப்ப பிள்ளையவர்கள் ௪௫௬

'ஆலவா யருளாடல்' (கால்மாறிநடித்த காதை):— ௨௯௭

இமயத்தில் புலிக்கோடி பொறித்தது:—கோயமுத்தூர் சி. கு. நாராயணசாமி முதலியாரவர்கள் ௪௩௬

இளைஞர்கடன்:—காரைக்குடி அரு. சோமசுந்தரம் செட்டியாரவர்கள் ௧௯௧

* இறையனார் அகப்பொருள்:—கா. சுப்பிரமணியபிள்ளை யவர்கள், M. A., M. L., Advocate ௱௫, ௧௫௩, ௧௯௩, ௨௪௧, ௨௮௧, ௩௨௯, ௩௭௭, ௪௧௭, ௪௯௫, ௫௱௫

இன்னுரை:—கருந்திட்டைக்குடி வி. சாமிநாதபிள்ளை யவர்கள் ௪௯௪

ஈயார்தேட்டைத் தீயார்கொள்வர்:—'அப்பர்தமிழகத்தான்' ௧௯௬

உமாபதிசிவாசாரியர் புராணம்:—கா. சுப்பிரமணிய பிள்ளை யவர்கள், M.A., M.L., ௪௮௮

எவ்வுயிருக்கும் அன்பாயிரு:—சீவகாருணியத்தொண்டன் ௯௧

ஏடுதேடல்:—சீகாழி ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளையவர்கள் ௩௪௩

ஒரு குறளுண்மை விளக்கம்:—ஜலகண்டபுரம்
அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள் உ௮௬, ௩௫௫
ஓவியம்:—T. S. நெல்லையா அவர்கள் ௧௪௮
கடவுள் நம்பிக்கை:—'குறுமுடியான்' உ௬
கடிதப் பாசுரம்:—கருந்திட்டைக்குடி வி. சாமிநாத பிள்ளையவர்கள் ௪௬௫
*கண்ணகி கற்பு மாண்பு:—திருச்சி, பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் ௫ா0
கல்விச் செல்வம்:—ஆரியூர் வ. பதுமநாப பிள்ளையவர்கள் ௩௩௪
குட்டிக் குறள்:—சுகவனம் சிவப்பிரகாசம் அவர்கள் ௫௧, ௬௬
குமாரகுருபர சுவாமிகள் பரம்பரை ௩௭௧
குழந்தைகளின் நல்வளர்ப்பு:—பு. முத்துசாமிப் பிள்ளையவர்கள் ௧௭௭
கோயில்:—பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் ௩௩௪
சங்கீதம்:—திருவனந்தபுரம் T. இலக்குமண பிள்ளையவர்கள் B. A. உஉ௬
சடங்குகள்:—காரைக்குடி அரு. சோமசுந்தரம் செட்டியாரவர்கள் உ௭௧
சிலப்பதிகார காலம்:— இ. மு. சுப்பிரமணியபிள்ளையவர்கள், தமிழ்ப்பண்டிதர் ௮௫
சிவதலங்களின் திருப்பெயர் வரலாறும் சீகாழிப் பன்னிரு திருப்பெயர் வரலாறும்:—கோயமுத்தூர் C.K.சுப்பிரமணியமுதலியாரவர்கள் B.A., F.M.U ௩௬௫, ௫உ௬
சிறு தெய்வவழிபாடு:—காரைக்குடி அரு. சோமசுந்தரம் செட்டியாரவர்கள் ௧௩௮
சீவக சிந்தாமணி (திருத்தக்கதேவர்):—பெங்களூர் நா. செங்கல்வராயன் அவர்கள் ௪௭௮
சீவகாருணிய இயக்கம்:—காரைக்குடி அரு. சோமசுந்தரம் செட்டியாரவர்கள் உ௯௬
செஞ்சோற் சதங்கை ௩௮
செந்தமிழ்ச் செல்வி வழிபாடு:—கா. சோமசுந்தரம் பிள்ளையவர்கள் ௪௮௩
சேக்கிழார் செய்யுள் மாட்சி:—பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் ௧௭

*சேக்கிழார் செய்யுளின் தெய்வநலம்:—பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியாரவர்கள் சஉச

*சேக்கிழார் பெரிய புராணம்:—வேலூர் C. S. இராஜாப் பிள்ளையவர்கள் ருகசு

சைவ சித்தாந்த சங்கம் க

தடாதகைப்பிராட்டியார் திருமணம் ருசச

தமிழர் கலைக்கழகம்:—V. சங்கரலிங்கம் சகூஉ

தமிழர் பல்கலைக் கழகம் சகரு

தமிழின்பெருமை:—திருச்சி ம. பெரியசாமிப்பிள்ளையவர்கள் ருஎ0

தமிழ்க் ககரத்தை யொட்டிய சில குறிப்புக்கள்:— க. ப. சந்தோஷம் அவர்கள், B.A., L.T. உஉசு

தமிழ்ஞானசம்பந்தர்:-கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், ருக

தமிழ்நிதி:—திருமலைக்கொழுந்துப்பிள்ளையவர்கள் B.A. ருாக, ருசசு

தமிழ்மொழியாக்கம்:-T. S. கந்தசாமி முதலியாரவர்கள்,எ, ருாசு

தம்பிரான்றோழர்:—இ. மு. சுப்பிரமணியபிள்ளையவர்கள் உசசு

திருக்குறட்பாயிரக் கருத்து:—மா. வே. நெல்லையப்ப பிள்ளை யவர்கள் B.A. கஅஎ, சகஉ

திருக்குற்றாலத் தேவாரம் சகஉ

திருக்கோயில்களில் சில சீர்திருத்தங்கள்:—காரைக்குடி அரு. சோமசுந்தரம் செட்டியாரவர்கள் சசசு

திருநெறித் தொண்டர் குழாங்கள்:—காரைக்குடி அரு. சோமசுந்தரம் செட்டியாரவர்கள் எஅ

திருப்பாசுரம்:—வேலூர் C. S. இராஜாப்பிள்ளையவர்கள் அரு, கஉஅ, ருாக, ருசரு

திருப்புறம்பியத்துக் கல்வெட்டுக்கள்:—T. V. சதாசிவ பண்டாரத்தார் அவர்கள் சரு

திருவாவடுதுறையாதீனத்துக் குருபரம்பரையகவல்:—திரிசிரபுரம், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் சஎ

தீபாவளிப்பண்டிகை:—இ.மு. சுப்பிரமணியபிள்ளையவர்கள் சாசு

‘தெய்வமணக்கும் செய்யுளெலாம்’—பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் ககூசு

தென்மொழி வடமொழி மயக்கம்:— க. ப. சந்தோஷம் அவர்கள், B.A., L.T. ருக, கஉசு

தொகை நூல் :—மயிலை சினி. கோவிந்தராசனாரவர்கள் ா0

நம்பியாண்டார் நம்பியும் இராஜ ராஜ சோழனும்:—வேலூர் C. S. இராஜாப் பிள்ளையவர்கள் ௩௯௦, ௪௩௭, ௪௭௦, ௫௧௫
பரப்பிரம்மோபநிஷத்:—சந்திரசேகர் ௩௪
பழந்தமிழ்:—மாகறல் கார்த்திகேய முதலியாரவர்கள் ௩௨௦, ௩௯௧
பாமணித்திரள்:—சாமிகாந்தன் ௧௧௯
புத்த நிருவாணகாலம்:—இ. மு. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் ௨௧௩
புறநானூறும் தமிழர்மாண்பும்:—திரிசிரபுரம் ம. பெரியசாமிப் பிள்ளையவர்கள் ௧௩௩, ௨௧௯, ௩௧௧, ௩௫௮, ௩௮௩
பெரிய புராணமும் பொருளிலக்கணமும்:—பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் ௨௯௨
மனுநீதிகண்ட சோழன்:—கரந்தை சா. சிதம்பரன் அவர்கள் ௪௯
மனைவி:—M. S. பூர்ணலிங்கம் பிள்ளையவர்கள், B.A., L.T. ௧௨௧
முகவுரைப் பிரசங்கம்:—தூத்துக்குடி சைவசித்தாந்த சபையின் ௩௯-வது ஆண்டு நிறைவு விழாத் தலைவர் திவான் பகதூர் T. N. சிவஞானம் பிள்ளையவர்கள் B.A. ௨௬௩
முன்னுரைச் சுருக்கம்:—திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த சங்கத்தின் நான்காவது ஆண்டு நிறைவுவிழாத் தலைவர் C. K. சுப்பிரமணிய முதலியாரவர்கள், B.A., F.M.U. ௧௨, ௭௩, ௧௮௧
முடங்கல்:—பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் ௬௧, ௪௩௩
முத்திநிச்சயம்:—ஞானசம்பந்த தேசிக மகா சந்நிதானம் ௨௫௮
முருகன் முறையீடு:—யாழ்ப்பாணம் கா. சோமசுந்தரம் பிள்ளையவர்கள் ௧௪௩
வெறுஞ்சிறுமொழி ௫௩

குறிப்புக்கள் ௫௫, ௯௪, ௧௫௧, ௩௨௫, ௩௨௮, ௩௭௩, ௪௧௪, ௫௫௦

திருவுருவப் படங்கள்

௧. உமாபதி சிவாசாரியர்
௨. குமரகுருபர சுவாமிகள்
௩. திருக்குற்றால நீர்வீழ்ச்சி
௪. காந்திமதியம்மை சந்நிதி
௫. தடாதகைப் பிராட்டியார் திருமணம்

தடாதகைப்பிராட்டியார் திருமணம்

(இதனைத் தந்தத்தில் செய்தவர் திருநெல்வேலி எம். சுப்பிரமணிய ஸ்தபதி.)

ஓம்

திருச்சிற்றம்பலம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றும்
திங்கள்தோறும் வெளிவருவது

சிலம்பு ௩	மெய்கண்டார் ஆண்டு-௭௱௬ மார்கழித்திங்கள் 1925௵ டிசம்பர்௴—1926௵ ஜனவரி௴	பரல் கஉ

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

இறையனார் அகப்பொருள்

[கா. சுப்பிரமணிய பிள்ளை M.A., M.L.]

(௩௭௰-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைவன் இடமணித்து என்று கூறினமையால் தலைவி தெளிந்தாளென்னுங் கருத்தை ஒரு துறையாக வைத்துத் தஞ்சைவாணன் கோவையார் செய்யுள் செய்துள்ளார். இது திருச்சிற்றம்பலக் கோவையாருட் காணப்படவில்லை. ஆதலால் இது பிற்காலத்து முறையென்று கொள்ளவேண்டியதா யிருக்கிறது.

"எத்துந் தமதுரை தேறிநின் றேனையிங் கேதனியே
வைத்தங் ககன்று மறைந்துறை யார்........"

என்றது காண்க.

இதை இன்னொரு முறையாகத் திருவள்ளுவரது காதற் சிறப்பின்கண் காணுதல்கூடும். காதலர் தனது உள்ளத்தில் எஞ்ஞான்றும் உறைவதினால் அவர் பிரிந்தாரென்பது தவறென்று தலைவி கூறுவதாகத் திருக்குறட் செய்யுளொன்று அமைந்திருக்கின்றது.

"உவந்துறைவ ருள்ளத்து ளென்று மிகந்துறைவர்
ஏதில ரென்னுமிவ் வூர்" —குறள்

இன்னும் புதுவதாய துறைச் செய்யுளொன்று தஞ்சைவாணன் கோவையுட் காணப்படுகின்றது. அதாவது தலைவி அணிந்த அணிகள் இருவருங் கலந்தகாலை வேறுபாடெய்தியிருத்தலைக் கண்ட தலைவன் தலைமகளைத் தெளிவித்தற்பொருட்டு அவ்வணிகளைப் பாங்கியணிந்தவாறே தானுமணிந்ததாகக் கூறித் தெளிவுபடுத்துவது. இது தஞ்சைவாணன் கோவையுள் பிரிவச்சத்திற்கு முன்னே கூறப்பட்டுள்ளது. களவியலுரையுள், தலைவியைப் பிரிவறிவுறுத்துவதற்குமுன் தலைவன் 'கருங்குழற் கற்றை மருங்கு திருத்தி அளகமும் நுதலுந் தகைபெறநீவி ஆகமுந் தோளும் அணிபெறத் தைவந்து குளிர்ப்பக் கூறினான்' என்று மொழியப்பட்டது. இதன்கருத்தை விரித்தோ, பிற எக்காரணம் பற்றியோ தஞ்சைவாணன் கோவையுட் கூறிய துறை அமைந்திருத்தல் கூடும். அது நம்பியகப்பொருளுள் ஐயந்தீர்த்தல் என்ற துறையின்பாற் படுமென்பர்.

"காவியுங் காரி லாவியுந் தோய்குழ ணியஞ்சேல்
வாவியுஞ் சோலையுஞ் சூழ்தஞ்சை வாணன்றென் மாறைவயற்
காவியுஞ் சேலுங் கமலமுங் காட்டுநின் கண்மலரும்
ஆவியும் போலினி யாரணி யாக வணிந்தனனே."

—தஞ்சைவாணன் கோவை

‘அணிகள் திருத்தல்’ என்பது களவியல் உரையுள் இடந் தலைப்பாடு, பாங்கற்கூட்டம் என்பவற்றிற்குப் பின் வருவதாகக் கூறப்பட்டது. தஞ்சைவாணன் கோவையுடையார் தமது கருத்துக் கேற்றவாறு துறைகளை முன்னும் பின்னும் மாறிவைத்தல் முன்னேயே சுட்டப்பட்டது.

இனி இருவரும் முதலிற் கண்டு கலப்பதற்குமுன் விளையாட்டுக் காரணமாகவே பொழிலிடத்து தலைவி வந்தமையால், இடமணித் தென்றபின் பிரிவுணர்த்துங்காலை தலைவன் தலைவியை நோக்கி நீ சிறிது விளையாடு, நான்போய் விரைவில் வருகின்றேன் என்று கூறுதல் மரபு. அதனை ஒரு துறையாகக் களவியல் உரையாசிரியர் கூறவில்லை. ஆசிரியர் தொல்காப்பியனாரும் அதனைத் தெளிவாக எடுத்துக் கூறிற்றிலர். திருச்சிற்றம்பலக்கோவையாருள் அது இடமணித்தெனக் கூறிய துறையின் அமைந்துள்ளது. அத்துறையையே ‘பிரிந்து வருகென்றல்’ என்னுந் துறைக்கிழ்த் தஞ்சைவாணன் கோவையுடையார் கூறினார். ஆயின் அதனை இடமணித்து என்னும் துறைக்குமுன் வைத்தார். பிரிவு கூறியபின் தலைவன் ஊர்சேய்த்தோ அணித்தோவென்று தலைமகள் கவலைப்பட இடம் அணித்து என்று தலைவன் கூறியதாகத் தஞ்சைவாணன் கோவையுள் செய்யுட்கள் அமைந்துள்ளன. ஆதலால் ஆடிடத்துய்த்தல் என்பது சிறப்பாகத் திருச்சிற்றம்பலக் கோவையாருட்டான் காணப்படுகின்றது. ஆனால் மேற்குறித்த இரு கோவைச் செய்யுட்கும் பொருள் ஒன்றே.

“.........முன்னியாடுபின் யானளவா
வெளிவளர் தில்லையொருவன் கயிலையுகுபெருந்தேன்
றுளிவளர்சாரற் கரந்துங்ஙனேவந்து தோன்றுவனே”

—திருக்கோவையார்

“... ....ஊங்குயர் சோலையி னூடொளித்து
நின்றே வருவலிங் கேவிளை யாடுக நீ சிறிதே.”

—தஞ்சைவாணன் கோவை

தஞ்சைவாணன் கோவையுள் பிரியேன் என்று கூறிய செய்யுளுக்கு அடுத்த பாட்டில் பிரிந்து வருகென்றல் கூறப்

படுதல் அத்துணைப் பொருத்தமுடையதல்ல. பிரிவச்சங் கூறிய பின் வன்புறை நிகழ்ந்தே பிரிவு நேர்தல் முறை. அக்கோவையுள் இடமணித்து என்றதற்குப் பின் மேற்கூறிய செய்யுளையே அமைத்து ஆடிடத்துய்த்தல் என்று அதனை வழங்குதல் கருதத்தக்கது. இத்துறைக்குப் பின் தலைவி மீண்டு ஆயவெள்ளத்தை அடைந்தகாலை அவளது அருமை நோக்கித் தான் அவளோடு கலந்தது கனவோ நனவோவென்று எண்ணுதல் அருமையறிதல் என்னுந் துறையாகும். இதற்குக் காரணம் தலைவி பிரிந்து சென்றகாலை தலைவன் ஒரு மருங்கு மறைந்து அவள் செலவைப்பார்த்து நிற்பதே. இது களவியல் உரையுள்ளும் விளக்கமாகக் கூறப்பட்டது. தான் கலந்தது கனவோ நனவோவென்றும் மெய்யோ பொய்யோ வென்றும் ஐயுறுவதாகவும், கனவே, பொய்யே என்று திரிபுணர்ச்சி எய்துவதாகவும் செய்யுள் வருதல் காண்க.

" கனவே நனவாய்விடினு மெய்தா தினிக் கண்ணுறவே "

' புணர்ப்போ கனவோ பிறிதோ அறியேன் புகுந்ததுவே '

—திருக்கோவையார்

" ....பெண்ணணங்கின்
றிருநலஞ்சேர்ந்ததெல்
லாங்கனவே யென்று சிந்திப்பேனே "

" பொய்யே யினிமெய்ம்மையா யினுமில்லைப்புணர் திறமே "

தஞ்சைவாணன் கோவையுள் அருமையறிதல் என்பது நிகழ்வதற்குமுன் செல்லுங்கிழவியின் செலவுகண்டு உளத்தோடு சொல்லல் என்னும் ஓர்துறையும் பாகனொடு சொல்லல் என்னும் ஓர் துறையும் காணப்படுகின்றன. இத்துறைகட்குச் செய்யுள் பண்டை நூல்களிலுங் காணப்படுகின்றது. அது பின்வருமாறு:

" காணு மாயிற் றுயிரென மொழிவோர்
நாணிலர் மன்ற பொய்ம்மொழிந் தனரே
யாஅங் காண்டும்மே யரும்பெற லுயிரே
சொல்லு மாடு மென்மெல வியலுங்

கணைக்கா லானுகிய நுசுப்பின்
மழைக்கண் மாதர்ப் பணைப்பெருந் தொட்டே ”

இதனைக் களவியல் உரையாசிரியர் அருமையறிதல் என்னும் துறைக்குப்பின் தலைவன் இயற்கைப் புணர்ச்சி நிகழ்ந்த இடம் விட்டு நீங்குங்கால் கூறிச் செல்வதாக அமைத்துள்ளார்.

“என்னுயிராயத் திடையிதுவோ நின்றியங்குவதே.”

என்றது காண்க.

இத்துறைக்குக் கூறிய செய்யுட்கள் பலவுள்ளும் தலைவியைத் தலைவன் தனது உயிராகக் கருதுவதாக மொழிகின்றமையால் அவளோடு பின் சேர்வதற்கு இருமுறையுள் ஒன்றினைக் கைப்பற்றுவானென்பது உணரக் கிடக்கின்றது. களவொழுக்கம் கூடாதென்று தலைவன் கருதுவானாயின் அவளை மணத்தற்கு முயல்வன். அங்ஙனங் கருதானாயின் மீண்டும் கூட்டத்திற்கே முயல்வன். அருமையறிந்து ஆற்றானாகிய தலைமகன் தலைமகள் ஆயத்தொடு செல்லாநின்றபோது அவளை நோக்க அவள்தனக்கு மிகவும் நெருங்கிய நட்புடைய தோழியொருத்தியையே பலகால் கடைக்கண்ணால் பார்க்கக் கண்டு அவள் வாயிலாகத் தனது கருத்து நிறைவேறப் பெறலாமென்று உணர்ந்து ஆறுதல் அடைதல் ஓர்முறை. அது திருச்சிற்றம்பலக் கோவையாருள்ளும் தஞ்சைவாணன் கோவையுள்ளும் கூறப்பட்டது. களவியல் உரையாசிரியர் அதனை விரித்திலர். களவியல் ஐந்தாம் சூத்திரத்துள் தோழிமாட்டு இரந்து குறையுறுதல் என்பதனால் அது பெறப்படும்.

“திருமான் முகமலாச் சேபரி பாய்கயல் சென்றுசென்றவ்
வொருமா னகைமுக மாமல ரோடை யுலாவருமே.”
—தஞ்சைவாணன்கோவை

பாங்கியறிதல் என்ற துறையோடு இயற்கைப் புணர்ச்சியென்னும் பகுதியானது முடிகின்றது. அதற்குப்பின் தலைவன் களவொழுக்கம் மேல் நிகழ்த்தக் கருதியகாலை தனது பாங்கனால் அது வாய்க்கப் பெறுதல் பாங்கற் கூட்டம் எனப்படும். அவ்வா

றன்றி மீட்டும் முன்னிடத்திற்கே சென்று தலைவியைக் கண்டு கூடுதல் இடந்தலைப்பாடு என்று கூறப்படும். இவ்விரண்டும் எல்லா நூல்களானும் கூறப்பட்டனவே. ஆசிரியருட் சிலர் இடந் தலைப் பாட்டினைப் பாங்கற் கூட்டத்திற்கு முன் அமைத்துள்ளார் கள். பாகனொடு கிளத்தல் தஞ்சைவாணன்கோவையுள் மாத்தி ரமே இயற்கைப் புணர்ச்சிப்பகுதியுள் காணப்படுகின்றது. பார்த் திபற்குக் கண்ணன் அமைந்ததுபோல, பாகனே பாங்கனுயிருந்தா லொழிய அத்தகைய கூற்று நிகழ்தல் சாலாதென்க. அதுவும் இயற்கைப் புணர்ச்சியுள் அமைவதில்லை. களவொழுக்கத்துள் தானே கூடுதல், பாங்கன் கூட்டக்கூடுதல் என்பனவே பெறப் படும். பாங்கி கூட்டக்கூடுதல் என்பது கிடையாது. பாங்கி வாயிலாகத் தலைவன் குறையிரந்து நின்று தலைவியைச் சேருதல் தலைவன் தானே கூடுதல் என்னும் பகுதியுள் அடங்கும். தலை வன் குறையிரந்து நில்லாதவிடத்து பாங்கனைப்போலத் தானுக இருவரையும் கூட்டுவதில்லை யாகலினென்க. தலைவன் பின் கூட்டத்திற்கு வெளிப்படையாக முயல்வதுபோலப் பாங்கி வாயி லாகத் தலைவி முயலாமையுங் காண்க. களவொழுக்கத்திற்கே யன்றி வரைவு நிகழ்தற்கும் பாங்கன் வாயிலாவா னுகலின் பாங்கற் கூட்டம் ஓர் சிறந்த பகுதியாகும். அது பின்வரும்.

(தொடரும்)

கண்ணகி கற்புமாண்பு

[திருச்சி பண்டிதர், மு. வேங்கடசாமி நாட்டார்]

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்."

குமரியொடு வடவிமயத் தொரு மொழிவைத் துலகாண்ட வேந்தர் பெருமானுகிய இமயவரம்பன் நெடுஞ் சேரலாதற்கு மைந் தரும் ஆரியமன்னர் ஈரைஞ் ஞாற்றுவர்க்கு ஒருதானுகி அமர் கடந்து இமிழ்கடல் வேலியைத் தமிழ் நாடாக்கிய சேரன் செங் குட்டுவனென்னும் வீரருள் வீரற்கு இளையாரும் ஆகித் தமி

ழெனும் அளப்பருஞ் சலதியைக் கடந்து நின்று, சிந்தை செல் லாச் சேணெடுந் தூரத்து அந்தமிலின்பத்து அரசாள் வேந்தாகப் பற்றறத் துறந்த இளங்கோவடிக ளென்னும் நற்றவக்குரிசில் தமிழகத்தின் பல்வகைப் பெருமைகளையும், தமிழ்மொழியின் ஒப்புயர்வற்ற மாட்சியையும் விளக்குவதாகத் தமது முத்தமிழ்ப் புலமையும் வித்தகக் கவித்திறனும் தோன்ற ஓர் காப்பியம் இயற் றக் கருதியிருந்தனர். இருந்தார்க்குத் தகுந்ததோர் செவ்வியும் வாய்த்தது. அஃதென்னை யெனின், செங்குட்டுவன் மஞ்சு சூழ் சோலை மலைவளங் காணற்பொருட்டுத் தேவியாகிய வேண்மா ளுடன் நால்வகைப் படையும் புடைசூழப் புறப்பட்டு வந்து பேராற்றங் கரையிலுள்ள மணற்குன்றிலே தங்கி யிருப்பானு யினன். இளங்கோவடிகளும் உடன்வந்து அவணிருந்தனர். மலைவாணராகிய வேட்டுவர்கள் ஒருங்கு திரண்டு யானை வெண் கோடும், அகிலின் குப்பையும், மான்மயிர்க் கவரியும், மதுவின் குடங்களும், சந்தனக் குறையும், சிந்தூரக் கட்டியும், அஞ்சனத் திரளும், அணியரிதாரமும், ஏல வல்லியும், இருங்கறி வல்லியும், மற்றும் பல பலவுமாகிய மலைபடு பொருள்களைக் காணிக்கையாகச் சுமந்துவந்து தந்து, செங்குட்டுவனை நோக்கி 'மன்னவர் மன்ன, எழ்பிறப்படியேம் வாழ்க நின்கொற்றம்; யாம் வாழும் மலைப் பக்கத்தில் ஒரு வேங்கை மரத்தின் நிழற்கண்ணே கொங்கை யொன்றிழந்த நங்கையாகிய பத்தினி யொருத்திவந்து நின்றாள்; அவள்பொருட்டு இந்திரன் றமர்வந்து திரண்டு, அவளது காதற் கொழுநனை அவட்குக் காட்டி, அவளோடும் எங்கள் கண்காணும் படியாக விண்போயது பெரியதோர் வியப்பா யிருந்தது; அவள் எந்நாட்டாள் கொல், யார் மகள் கொல்லோ அறிந்தருள்க' என்று சொல்லிப் போயினர். தண்டமிழாசானாகிய மதுரைக் கூல வாணிகன் சாத்தனார் அப்பொழுது அங்குவந்து செங் குட்டுவனைக் கண்டு களிப்புற்றிருந்தவர், தீவினைச் சிலம்பு கார ணத்தாற் கோவலன் கொலையுண்டது முதலாக மதுரையில் நிகழ்ந்த வரலாறனைத்தையும் அரசற்குக் கூறினர். அவனுடன் கேட்டுக்கொண் டிருந்தார் இளங்கோவடிகள். அடிகளின் மாசற்ற உள்ளத்தில் மூன்று சிறந்த நீதிகள் ஊன்றிப் பதிந்தன. அவை,

அரசநீதியிற் சிறிது பிழைப்பினும் அவ்வரசரை அறக்கடவுளே கூற்றமாய் நின்றுகொல்லு மென்பதும், புகழமைந்த பத்தினியை மக்களேயன்றித் தேவரும் முனிவரும் முதலாயினோர் ஏத்துவ தியல் பென்பதும், ஊழ்வினையானது அதன் பயனை நுகர்வித்தல் ஒரு தலையென்பதும் ஆம். இம் மூன்றுஞ் சிலம்பு காரணமாக நிகழ்ந்தமையின் சிலப்பதிகாரம் என்னும் பெயரால் ஓர் காப்பியம் இயற்றல் வேண்டுமெனத் துணிந்தனர். தாம்கேட்ட வரலாற்றிலிருந்து அடிகள் தாம் இயற்றப் போகும் காப்பியத்திற்குப் பாவிகம் எனப்படும் உள்ளுறை அமைத்துக்கொண்ட வியப்பைக் காட்டினும், அதற்குப் பெயர் தந்த வியப்பு மிகவும் பெரிய தொன்றாகும். வரலாற்றுடன்பொருந்திய மூன்று உள்ளுறைகளை ஒருங்கு தெரிப்பதாய், அதனானே (பெயர்) தன்னை ஆராய்ந்த துணையானே காப்பியத்தின் பண்பினை யுணருமாறு உதவி புரிவதாயுள்ள பிறிதொரு பெயர் யாதுளது? இங்ஙனம் துணிந்து வைத்த அடிகள் சாத்தனாரைப் பார்த்து,

"அரசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றுவதூஉம்
உரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலும்
ஊழ்வினை யுருத்துவந் தூட்டு மென்பதூஉம்
சூழ்வினைச் சிலம்பு காரண மாகச்
சிலப்பதிகார மென்னும் பெயரால்
நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்"

என்று கூறினர். சாத்தனாரோ

"முடிகெழு வேந்தர் மூவர்க்கு முரியது
அடிகள் நீரே யருளுக"

என்றனர். என்றலும் இளங்கோ வடிகள் தமிழ்த்தெய்வத்தின் திருவடிச் சிலம்பாகிய இதனைத் தமிழ் மக்களின் செவியகத்தே ஒலித்துக்கொண்டிருக்குமாறு இயற்றி யளித்தனர். முத்தமிழ்ப் புலமை சான்று இதற்கு அரியதோர் உரைவகுத்தருளிய அடியார்க்கு நல்லாரே இக்காப்பியத்தின் பெருமையைக் குறித்து,

"எழுத்தின் றிறனறிந்தோ வின்சொற் பொருளின்
அழுத்தந் தனியொன் றறிந்தோர்—முழுத்தும்
பழுதற்ற முத்தமிழின் பாடற் குரையின்
றெழுதத் துணிவதே யான்."

என்று கூறியிருப்பரேல் இதன் அருமை பெருமைகளை நாம் எங்ஙனம் அளவிட்டுரைத்தல் சாலும்? இனி, இளங்கோவடிகள் இத்தொடர்நிலைச் செய்யுட்குத் தலைசிறந்த மூன்று நீதிகளை உள்ளுறையாகக் கொண்டார் எனினும், அவற்றுள் இடைநின்ற பத்தினியை உயர்ந்தோர் ஏத்தலுண்டென்பதில் அவர் பெருநோக்குடையரென்பது தெளிவாகின்றது. என்னை? பதிகத்தின் பின்னர் இவ்வுரை யிடையிட்ட பாட்டுடைச் செய்யுளின் முதற்கண் நிற்பது உரைபெறு கட்டுரை. அதில், அடிகள்,

க. "அன்று தொட்டுப் பாண்டியனாடு மழைவறங் கூர்ந்து வறுமையெய்தி வெப்பு நோயுங் குருவுந் தொடரக் கொற்கையிலிருந்த வெற்றிவேற் செழியன் நங்கைக்கு............விழவொடு சாந்திசெய்ய நாடுமலிய மழைபெய்து நோயுந் துன்பமும் நீங்கியது."

உ. "அதுகேட்டுக் கொங்கிளங் கோசர் தங்கணாட்டகத்து நங்கைக்கு விழவொடு சாந்திசெய்ய மழை தொழிலென்றும் மாறாதாயிற்று."

ங. "அதுகேட்டுக் கடல் சூழிலங்கைக் கயவாகு வென்பான் நங்கைக்கு நாட்பலி பீடிகை கோட்டமுந்துறுத்தாங்கு அரந்தை கெடுத்து வரந்தரு மிவளென ஆடித்திங்க ளகவயினாங்கோர் பாடிவிழாக்கோள் பன்முறை யெடுப்ப மழை வீற்றிருந்து வளம் பல பெருகிப் பிழையா விளையுளுடாயிற்று."

ச. "அதுகேட்டுச் சோழன் பெருங்கிள்ளி கோழியகத்து எத்திறத்தானும் வரந்தரு மிவளோர் பத்தினிக் கடவுளாகுமென நங்கைக்குப் பத்தினிக்கோட்டமுஞ் சமைத்து நித்தல் விழாவணி நிகழ்வித்தோனே."

என, தமிழ் நாட்டரசர்களும் இலங்கை யரசனும் கண்ணகியைத் தெய்வமாகவே கொண்டு அவட்குக் கோட்டஞ் சமைத்துத் திரு

விழா முதலியன புரிந்தமையையும், அதனால் அவரவர் நாட்டில் மழை வளம்பெருகி, நோயும் துன்பமும் நீங்கினமையையும் கூறியருளினர். இக்காப்பியத்தின் இறுதியிலுள்ள வரந்தருகாதையில் சேரன் செங்குட்டுவன் பத்தினிக் கோட்டம் வகுத்து நித்தல் விழாவணி நிகழுமாறு நிபந்தஞ்செய்து, கோயிலை மும்முறை வலமாகவந்து வணங்கிநின்றபொழுது, சிறையினின்றும் நீங்கிய ஆரியமன்னர்கள் முதலாயினாரும், குடகக்கொங்கரும், மாளுவவேந்தரும், கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும் தத்தம் நாட்டிலேசேரர் பெருமானின் நாளணி வேள்விசெய்யும்பொழுது வந்து அருள்புரிய வேண்டுமென வணங்கிவேண்டாநிற்க 'வரம் தந்தேன்' என்று ஒருகுரல் எழுந்தது; என்று கூறப்பெற்றுளது. இதன்பின்னே நிகழ்ந்த வரலாறாகிய, அரசர் பலர் பத்தினிக் கோட்டஞ் சமைத்து விழாக்கொண்டாடியதனை, இளங்கோவடிகள் காப்பியத் தொடக்கத்திற்றானே கூறிவைத்தது அவர் பத்தினியை யேத்துங் குறிப்பினராதலை நன்கு புலப்படுத்தும். இதனைக்கற்கப்புகுவார்க்கும் அத்தகைய குறிப்பு நிகழவேண்டுமென்பதும் அடிகள் கருத்தாதல் கூடும். இந்நுட்பங்களை யுணர்ந்தன்றோ இதற்கு உரைவகுத்த அடியார்க்கு நல்லார், மங்கலவாழ்த்துப்பாடல் உரைக்கண் "கண்ணகியை முற்கூறினார், பத்தினியையேத்துதல் உட்கோளாகலான்" என்று கூறிவைத்தனர். அரும்பதவுரைகாரரும் "இவளை முன் கூறிற்று, கதை நாயகியாதலின்" என்றனர். எனவே, இக்காப்பியத்திற்குப் பிறிதொருபெயர் கூற வேண்டுமென்னில் 'கண்ணகி கற்பு' என்று கூறுதல் சாலும். இராமாயணம் என்பதற்குச் 'சிறையிருந்தாளாகிய சீதையின் ஏற்றங் கூறுவது' என்று ஒருசார் அறிஞர் பொருள் கொள்ளுதல் லுங்காண்க. ஆனால், அங்கே, இராமன் காப்பியத்தலைவனாதற்கு வேண்டிய இலக்கணமெல்லாம் ஒருங்குடையனா யிருத்தலின் 'இராமவதாரம்' என அதற்குப் பெயர் கூறுதல் சாலும். இங்கோ கோவலன் அத்தகையனல்லன். கண்ணகியே தலைவி யாதல் வேண்டு மென்க. இனி, கண்ணகியின் உயரிய பண்புகளாக இக் காப்பியத்தால் அறியலாவனவற்றை எடுத்துக்காட்டுதும்.

(தொடரும்)

நம்பியாண்டார் நம்பிகள்

[வேலூர் C. S. இராஜாப்பிள்ளை]

(சஎ௫-ம் பக்கத் தொடர்ச்சி)

நம்பிகள் அருளிய விநாயகர் இரட்டைமணிமாலை

என்னை நினைந்தடிமை கொண்டென் னிடர்கெடுத்துத்
தன்னை நினையத் தருகின்றான்—புன்னை
விரசு மகிழ்சோலை வியனுரை யூர்முக்கண்
அரசுமகி ழத்திமுகத் தான்.

திருவருள் பெறுதற்குரிய னல்லே னெனத் தன்னைக் கருதிய வாற்றால், "என்னை நினைந்து" எனத் தன்னை இழிவுபடுத்திக் கூறினார். அன்றி என்னை நினைந்தது எனக்கே அதிசய மாகின்றதெனவுங் கூறலாம்.

சிவபெருமான் தாமாகவே அருள் செய்தாலன்றி, உயிர்கள் எவ்வித இடையூறும் நீங்கப்பெறாராகலின், 'அடிமை கொண்டு என் இடர்கெடுத்து' என்றார். அப்பெருமானைத் தியானிப்பதும் அவர் உணர்த்தினாலல்லது ஆகாதென்பது போதர, "தன்னை நினையத் தருகின்றான்" என்றார்.

"தொண்ட னேனை நகருமா நகரே"

"புந்திப் பரிவிற் குருளையை எந்திய பூனையைப்போல், எந்தைக் குரியவன்கா ணத்தனே கயிலாயத்தனே" என்பன முதலிய அருமைத் திருவாக்குகளும் உணரற்பாலன.

இந்நகர்த் தலவிருக்ஷம் புன்னை மரமாகலின், சோலையைப் புகழ்வார் அதனையுங் கூட்டி "புன்னை விரசு மகிழ்சோலை" என்றார். "சோலை வியனுரையூர்" என்பது நீர்வள நிலவளங்கள் அமையப்பெற்றதென்பதை உணர்த்தும்.

முக்கண் அரசு - சிவபெருமான். முக்கண் - சூரியன், சந்திரன், அக்கினி. எல்லா உயிர்கட்குந் தலைவனாகலின் 'அரசு' என்றார்.

மகிழ் அத்திமுகத்தான்-மகிழ்தற் கேதுவாகிய விநாயகர். அத்தி-யானை; கரமுடைய தாகலின், கரியென்பது போல.

எந்நாளும் இன்பந் தருகின்றானாகலின் "முக்காலத்தினு மொத்தியல் பொருளைச், செப்புவர் நிகழுங் காலத்தானே" என்னும் இலக்கண முறைப்படித் "தருகின்று" னென நிகழுங் காலத்தாற் கூறினர்.

இவ்வெண்பா மிகுந்த பொருளாழ முடையதாயும், சொல் நயம் பொருந்தியதாயும், பல சாத்திரக் கருத்துக்களை யுடையதாயும், இலக்கண நயந்தழுவியதாயும் இருப்பது காண்க.

இந்நம்பிகளியற்றிய பிரபந்தங்கள் பெரும்பாலனவும் அகப்பொருள் தழுவியும், சிறுபாலன புறப்பொருள் தழுவியும் இருத்தலினாலும், பலவகைப்பட்ட செய்யுட்களுடன் நூல்கள் முடிந்திருப்பதனாலும், பொருள் இலக்கணம் யாப்பிலக்கண முதலியவற்றில் தெளிவுபெற்றுத் தேறிய புலவர்சிகாமணி யென்பதும் போதரும். (கலம்பகம் ௩௭.) "கருமங்கேண்மதி" எனத் தொடங்கும் அகவற்பாவில் ஆற்றுப்படை யிலக்கணம் அமைந்திருக்கிறது. பொருள் வேட்டாரொருவர் ஒரு வள்ளலை யடைந்து தாம் பெற்ற வளப்பங்களைத் தம்மெதிர்ப்பட்ட வறிஞர்க்குணர்த்தி அவரை அவ்வள்ளல்பாற் செலுத்தலே ஆற்றுப்படையாம்.

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்"
(தொல் - பொ - புறம் ௩௬.)

என்ற சூத்திரத்தான் இஃதுணரற்பாற்று.

ஆறு - வழி. படை - படுத்தல்; எனவே வழிவந்தா னொருவனை வழிப்படுத்தல் என்பது பொருளாம்.

இது பாணரைப்பற்றியதாகலின், பாணாற்றுப் படையாம்.

"கருமங் கேண்மதி கருமங் கேண்மதி
தருமதிப் பாண கருமங் கேண்மதி

....
நின்றுழி நிலாவு வன்றுயர் போயொழிந்
தின்புற்றிருநிதி எய்து மதுநன
துள்ளத் துள்ள தாயின்...............

....
கழுமல நாதன் கவுணியர் குலபதி
தண்டமிழ் விரகன் சைவ சிகாமணி
பண்டித ரின்பன் பரசமய கோளரி
என்புனை தமிழ்கொண் டிரங்கியென் உள்ளத்
தன்பினை யருளிய வாண்டகை தன்புகழ்
குறைவறத் துள்கி நிறைகடை குறுகி
நாப்பொலி நல்லிசை பாட
மாப்பெருஞ் செல்வ மன்னுதி நீயே''

இவ்வடிகளால் மேற்கூறிய இலக்கணம் அமைந்தமை காண்க.

இன்னும் இவ்வடிகள் அகப்பொரு ளமையப் பாடியது பின் வருஞ் செய்யுளால் விளங்கும்.

தலைமகளை விரும்பிய ஓர் தலைமகன் அவள்பாற் களவுப் புணர்ச்சி கருதி, அதன் பொருட்டுத் தோழியை வசப்படுத்த வுன்னிக் குறிப்பாக ஊர், பேர் முதலியன வினவித் தன் கருத்து வெளிப்படுத்தல் பாங்கி மதியுடன் பாடு என்னு மியலில் கேழல் வினதலென்னுந் துறை.

ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி ருரு

குண்டகழ் சூழ்தரு கொச்சைத் தலைவன்றன் குன்றகஞ்சேர்
வண்டக மென்மலர் வில்லியன் னீர்வரி விற்புருவக்
கண்டக வாளி படப்புடை வீழ்செங் கலங்கலொடும்
புண்டகக் கேழல் புகுந்ததுண் டோநுங்கள் பூம்புனத்தே.

இதுபோற் சிற்றம்பலக்கோவையிற் கலைமான் வினதல், வேழம் வினதல் முதலாப் பலதுறைகள் உள்ளன. (உ-ம்)

வேழம் வினதல்

இருங்களி யாயின்றி யானிறு மாப்ப வின்பம் பணிவோர்
மருங்களியா வனலாட வல்லோன் றில்லையான் மலையீங்
கொருங்களி யார்ப்ப வுமிழ்மும் மதத் திருகோ டொருநீள்
கருங்களி யார்மத யானை யுண்டோ வரக்கண்டதுவே.

இவ்வாறு வினவிய தலைமகன் குறிப்பைத் தோழி யுணர்ந்து இவர் யார்? இவரதெண்ணம் யாது, என ஆராய்ந்து தெளிதல்.

அந்தாதி ௨௬

புனத்தெழு லகம்மதக் குன்றமதா யங்கொர் புண்கலையாய்
வனத்தெழு சந்தனப் பைந்தழையாய் வந்தவந் தடியேன்
மனத்தெழு பொற்கழல் ஞானசம்பந் தன்வண்கொச் சையன்னான்
கனத்தெழு செங்கைக ளாயல் குலாய்த்திலர் கட்டுரையே.

இதுபோற் றிருக்கோவைச் செய்யுள்.

ஆழ மன்னோ வுடைத் திவ்வையர் வார்த்தை யனங்கனைந்து
வீழமுன் னோக்கிய அம்பலத்தான் வெற்பி னிப்புனத்தே
வேழமுன் னாய்க் கலையாய்ப் பிறவாய்ப்பின மென்றழையாய்
மாழைமென் னோக்கியிடையாய்க் கழிந்தது வந்தவந்தே.

மாணிக்க வாசக சுவாமிகள் நூலைப் புகழ்ந்தது

வருவா சகத்தின் முற்றுணர்ந் தோனை வண்டில்லை மன்னைத்
திருவாத வூர்ச்சிவ பாத்தியன் செய்திருச் சிற்றம்பலம்
பொருளார் தருதிருக் கோவை கண்டேயு மற்றப்பொருளைத்
தெருளாத வுள்ளத் தவர்கவி பாடிச் சிரிப்பிப்பரே.

தாம் பேறுபெற்ற மகிழ்ச்சிகூறல்

யாரேயெம் போல வருளுடையா ரின்கமலத்
தாரேயுஞ் சென்னித் தமிழ்விரகன் — சீரேயுங்
கொச்சை வயன்றன் குரைகழற்கே மெச்சி
அடிமை செயப்பெற்றே னறிந்து.

கலம்பகத்தாற் சொற்பொலிவு முதலியனவும், அந்தாதியால் பெரிய கதையைத் திரட்டிக் கூறுமியல்பும், உலா மாலை முதலியவற்றால் இன்னும் பல அரிய பொருள்களுங் கூறப்படுகின்றன. நூலாராய்ச்சி மிகவிரியுமாதலின், இதனோடு நிறுத்துகிறேன்.

இதுகாறுங் கூறியவாற்றான் நமது முன்னோர்கள் செய்தருளிய திருமுறைகளின் பெருமையும், அவை மத்திமகாலத்திடையே எழுந்தனவென்பதும், இராஜராஜன்வரலாறும், சோழர் ஆட்சி முறையும், திருமுறைகண்ட விதமும், நம்பிகள் அரசனுக்

குதவிய வரலாறும், நம்பிகள் அவதரித்த நாரையூர்ச் சிறப்பும், திருமுறையும் பண்ணும் வகுத்ததும், நம்பிகள் வீடுபேறும், நூல்களில் இரண்டொரு பாடல்களின் ஆராய்ச்சிகளும், பிறவும் சுருக்கி உரைக்கப்பட்டன.

முற்றிற்று

சேக்கிழார் பெரியபுராணம்

[வேலூர் C. S. இராஜாப்பிள்ளை]

கல்வி, அறிவு, ஆக்க முதலியவற்றாற் சிறந்த பெரியோர்களே! முழுமுதற் கடவுளாகிய பரசிவப்பெருமான் திருவருட்டுணைகொண்டும், எனது ஆன்றோர் ஆணை சென்னிமேற்கொண்டும் இன்று என் சிற்றறிவுக்கேற்ப ஈண்டு ஆராய்ச்சிசெய்ய எடுத்துக்கொண்டது சேக்கிழார் பெரிய புராணம் என்பதாம். இத்தொடர் மொழியை விரிக்கும் வழி சேக்கிழார் பாடிய பெரிய புராணம் எனப் பொருள்படும். இத்தொடர் மொழியின் முன்மொழியாகிய சேக்கிழாரைப் பற்றிக் கூறும்வழி, அப் பெரியார் வந்தருளிய நாடு, நகரங்களின் மாண்பும், மரபும், அம்மரபின் ஏற்றமும், குடியும் அவரெய்திய ஆக்கப்பாடும், அக்கால அரசரிவரென்பதும், வாழ்நாளியல்பும், முடிவும் எனப்பல திறப்படும். பின் மொழியாகிய பெரிய புராணத்தைப் பற்றி ஆராயுமிடத்து, புராணம் என்னுஞ் சொற்பொருளும், புராண இலக்கணமும், இந்நூல் பெரிய புராணமெனப் பெயர்பெற்ற தன்மையும், நூல் யாப்பும், நூல்செய்யப்பெற்ற திருப்பதியும், காலமும், இஃதோர் திருவருட் காவியமென்பதும், அரங்கேறிய அரசவையும், இந்நூல் தொடங்கிய காலத்தெழுந்த அசரிரி வாக்காகிய "உலகெலாம்' என்ற திருவாக்கின் சிறப்பும், திருநெறித் தமிழ்ப் பயன் விளங்கப் பாடிய திறமும், தனியடியாருந் தொகை யடியாருமான இருவகை நாயன்மார்கள் சரிதங் கூறுமியல்பும், பல புராணங்களில் விரவப் பாடிய சரிதமும், இல்லறம், மணப்பருவம், அன்பு, கற்பு, நானிலத் தைந்திணை வளம், நாடு நகரங்களின்

சிறப்பைத் தெள்ளிதிற் கூறும் பெருமை, சிவவேடப் பொலிவு, சோழ மன்னவர் அரசியலேற்றம் ஆதிய பல அருமைகளை விளக்கும் அருங்கவிகளும், இவற்றை விளக்கும் வாயிலாக நூலாசிரியருடைய சொற்பொருள் வனப்பு, சைவ உயர்ச்சி, அடியார் மாண்பு முதலியவற்றை விளக்குந் திறமும் என்பனவாகப் பலவகையான் விரியுமாகலின், அவற்றுள் முதலாவதாக நூலாசிரியரது சரித்திரத்தை ஆராய்ந்து பின்னர் ஏனையவற்றிற் செல்வோமாக.

சேக்கிழார் சுவாமிகள் அவதரித்த நாடு, பாலிநாடு, தொண்டை நாடு, தண்டக நாடு, துண்டீர நாடு எனப் பல பெயரொடு திகழ்தலின் இப்பெயர்க் காரணங்க ளெவையென ஆராய்வது இன்றியமையாததாம்.

வறுமையுற் றுழியுந் தொண்டை வளமலிநாட்டோர் தங்கள்
இறுமுடல் வருத்தியேனு மீவதற் கொல்கா ரற்றே
தெறுகதிர் கனற்றும் வேனிற் பருவத்துஞ் சீர்மைகுன்று
துறுமண லகடு கீண்டு மொண்புன லுதவும்பாலி.-காஞ்சிபுரா.

எனப் பெரியோராற் போற்றப்படுகின்ற பாலாறு வளஞ்சுரந்து நல்கமல்கும் பெருமை யுடைத்தாகலிற் பாலி நாடெனப்படும். மேல் இந்நாடு தொண்டைநாடெனப் பெயர் வாய்ந்தமை விளம்புவோமாக.

நாகருலகத் தரசனாகிய சேடன் பல்லாண்டு மகப்பேறின்றிப் பொன்னுலகினுஞ் சிறந்த பூவுலகெய்திப் பல திருப்பதிகளுஞ் சென்று அருந்தவம் புரிந்தும், தனது எண்ணம் நிறைவு பெறாதொழிய, முடிவில் நாகைக்காரோணம்புக்கு வழிபட அமலனருளால் ஓர் பெண்மகவு பெற்று, அன்புடன் போற்றி வளர்க்குநாளில், அவ்வருந்தவப்பயனாங் கன்னிகைக்கு மூன்று தனங்கள் முகிழ்ப்பக்கண்டு கவலை பெரிதுங்கொண்டு இறைவனை வேண்ட அந்நாள் வானிடத்தே அசரீரியாக,

முலையொரு மூன்று தாங்கு முற்றிழை தன்னைச் சின்னாள்
அலைகடற் காரைக் காரோணத் தண்ணலா ரொருபான் மேய
கலையுணர் வரிய மேன்மைக் கருந்தடங் கண்ணி பாதம்
நிலையுறப் பூசைசெய்து நேர்தொழு திரைஞ்சச் சென்றால்.

"அனேயமா தேவிசெய்யு மாமருள் நிரம்பப் பெற்று
தனேநிகர் பெருமை வாய்ந்த சருவபுட் காணிப் பாங்கர்ப்
புனேயிழை யுலவுங்காலப் புரவல னொருவன் ரேன்றும்
நினைதரு மவற்காண் போதே நிறத்தினென் றமுங்தாநிற்கும்"

"பின்னர் மற்றவனே வந்து பிறங்குற மணப்பான்"

என்றொரு வாக்கு நிகழக் கண்டு, சேடன் தன்மகளை நோக்கி, நீ பூமியிற் சிறந்து பொலிதருகின்ற நாகைக் காரோணத் திறைவி யை நாடோறுஞ் சென்றுவணங்குக வெனக் கட்டளையிட, அவ் வாறே அவள் செய்துவருங் காலத்து ஒரு நாள் சர்வதீர்த்தக் கரையில் உலாவிக்கொண்டிருக்க, அந்நாளில் அந்நகர்ப்புரவலனு கிய சாலீசுகனெனப் பெயர் பெற்ற சோழபூபதி ஆண்டடைய அவளைக் கண்ணுற்ற மாத்திரமே, வானிழல் அருளியபடி வன முலையொன்று மறைய, அவனே தன்னை மணத்தற்குரியனெனக் கருதி, மணாளனைக்கண்ட நாணத்தாற் றலை கவிழ்ந்து, மறைந்து தன்னிடஞ் சேர்ந்தாள். தந்தைபால் உற்றன மொழிந்தாள். அவனும் களிபேருவகை பூத்தான். இஃதிவ்வாறாக,

சர்வதீர்த்தக் கரையையடைந்த சாலீசுகனும், அதுபோது அத்திருமகளைக் கண்ணுற்றதனல் காதல் மீக்கூர்ந்து, அரண்மனை சென்று, அவ்விரவை அரிதிற்கழித்து, மற்றைநாட் புலருங்காலை எழுந்துநீராடித் தாஞ்செய்யு நியமங்கள் முடித்துத், திருக்கோ யிலை யடைந்து, சந்நிதியில் வீழ்ந்தெழுந்து, 'எம்பெருமானே! எல்லாம் வல்ல இறைவனே! வேண்டுவார் வேண்டுவதே ஈயும் விகிர்தனே,' எனப்பலவாறு துதித்து அடியேன் நெருநற்கண்ட அக்கன்னிகையைக் கடிமணம்புரியக் கருணைபுரிய வேண்டுமென வேண்டி, அழனிறக் கடவுளருளால் ஆதிசேடன் அருந்தவப்பய னுங் காதலிவாழும் நாகலோகஞ் செல்லுதற்குரிய வழியினைக் கண்டு, அவ்வழியே சென்று நாகர் தலைவனையடைந்தான். அடைந்த அரசனைக்கண்ட ஆதிசேடனும் இவனே நமது மங்கையை மணக் கும் மணாளன் என்று உன்னி 'நீ யாவன்? கருதிய கருமம்யா தென வினவ, சாலீசுகனும்

> "ஏற்றமா ரொருமார்த் தாண்ட னியலமை பெருங்குலத்திற்
> றோற்றமே வினன்யான் சாலிசுக னெனுநாம முன்னோன்
> ஆற்றலின் பாங்க ரொன்று கருதிவந் தடைந்தேன்"

எனக்கேட்ட சேடன் மகளை நோக்க அவளுங் குறிப்பான் உணர்த்த உணர்ந்து விதிப்படி அவ்விருவர்க்கும் மணம் புரிவிக்க மருவி மகிழ்வானாயினான். இவ்வாறு சில நாட்கள் செல்ல, ஓராண் மகவைப் பெற்று, பின்னர்ச்சின்னாள் கழிய மனைவியை நோக்கி, 'காதலி! யான் பூவுலகடைய விரும்பினேன்' என, அவளும்

> எனைவலிந்துவந் தெழின்மணம் புணர்ந்தனையி ருமையுந்தரவல்ல
> தனையனைக் கனிந்துதவினை பிரிவெனுந் தகைமைசார் துயர்தந்தாய்
> அனகநிற்கொரு நீதியுமாவதே அழகிதென் னொருமைந்தன்
> புனைவருந் திருப்புணரகிலா திவண் போதுமோ புகலென்றாள்.

எனவும், மன்னன் தேவியை நோக்கி, 'எனக்கு அவ்வுலகில்முன்னமே மணந்த ஒரு மனைவியும் மகனும் உளர். முறைப்படி அவனே அரசியற் குரியன், எனினும் நின்மகன் நானளித்த இத் தொண்டையங் கொடியினை நல்லதோர் குறிப்பாகக் கடலில் எறிவானாயின் அது வழிவிட அவ்வழியே என்னையடைந்து அரசுரிமை பெற்றுச் சிறப்படைவான்' என்று சொல்லி ஓர் தொண்டைக் கொடியை அவள்பாற் கொடுத்து விடைகொண்டு, தன்னாடுபுக்கு மணமகள் மகிழ வாழ்ந்தான். அப்பால் அவன் பணித்தவாறே மகன் தன்னைச்சார ஏற்று அவனைப் பாலி நாட்டின் காவலனாகச் செய்தான். இவனே தோண்டைமான் இளந்திரையன். இவன் ஆண்டதுபற்றியே தோண்டை நாடெனும் பெயரும் வழங்கிவருகின்றது.

'திரைகடந்து வந்தடைந்ததோர் பரிசினாற் செம்பியன் திருமைந்தன், திரையனென்றிடச் சிறந்தனன் தொண்டையாற் செறித்தலிற் றிரிபின்றிக், கரைதருந் தொண்டைமானென பாருங் கட்டுரைத்திடலானார்' எனவும்

> " இருநிலங்கடந்த திருமறு மார்பின்
> முந்நீர் வண்ணன் புறங்கடை யந்நீர்த்
> திரைதரு மரபின் உரவோன் உம்பல்

மலர்தலை யுலகத்து மன்னுயிர் காக்கும்
முரசு முழங்கு தானை மூவருள்ளும்
இலங்குநீர்ப் பரப்பின் வளைமீக் கூறும்
வலம்புரி யன்ன வசைநீங்கு சிறப்பின்
அல்லதுகடிந்த அறம்புரி செங்கோற்
பல்வேற் றிரையன்'

எனவும் எழுந்த ஆன்றோர் வாக்குகளும் இக்கருத்தே பற்றியன.

கடியலூர் உருத்திரங்கண்ணனார் தொண்டைமான் இளந்திரையன் மீதுபாடிய பெரும்பாணாற்றுப் படைக்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் எழுதிய உரைநடையும் ஈண்டுக் கவனித்தற்குரியது. அதுவருமாறு:—

திரையன் என்றதனால் நாகபட்டினத்துச் சோழன் பிலத்துவாரத்தால் நாகலோகஞ்சென்று நாக கன்னிகையைப் புணர்ந்த காலத்து அவள் யான்பெற்ற புதல்வனை என்செய்வேனென்ற பொழுது தொண்டையை அடையாளமாகக் கட்டிக் கடலிலேவிட, அவன் வந்து கரையேறின், அவற்கு யான் அரசுரிமை எய்துவித்து, நாடாட்சி கொடுப்பல் என்று அவன் கூற அவளும் புதல்வனை அங்ஙனம் வரவிடத் திரைதருதலின் திரையனென்று பெயர்பெற்ற கதை கூறினர்.

இனித் துண்டீர நாடென்பது:—

திருக்கயிலைமலையிற் சிவபெருமானைத் தரிசிக்கச்சென்ற சிவகணத்தவருள் ஒருவனாகிய துண்டீரன் என்பான் ஆண்டு உமையவளை வழிபடுவான் பல மாதருடன் எய்திய மாலதி என்னுந் தெய்வமகளைக் கண்டு காதல்கூர, அவளும் அத்தகையாளாகப் பெருமான் இருவரையும் நோக்கி "மண்ணுலகடைந்து மகிழ்வோடு வேட்ட இன்பந் திளைத்துப்பின் ஈண்டடைக" எனக் கட்டளையிட, அவ்வாறே அவன் பிறந்து மன்னனாகி ஆண்டமையின் துண்டீரநாடாயிற்று. தலைநகராகிய காஞ்சியுந் துண்டீரபுரமென வழங்குவதாயிற்று. இதனைப் பின்வருங் காஞ்சிப்புராணத் திருவிருத்தத்தானும் உணர்க.

ஏற்று தெண்டிரை வேலைசூழ் ஞாலம்
எந்து தோளிணை பரித்திகல் கடந்து
முற்றுசிர்த்தியின் வயங்கு துண்டீரன் முழுத்த கேள்விய
னுண்ட காரணத்தாற்
கற்றை வார்சடைத் தெய்வநாயக ரேகம்ப நாயகர்
காக்கு நாயகர்வாள்
பொற்றமாநகர்க் காஞ்சி துண்டீரபுர மெனப்பெயர்
பெற்றது மாதோ.

இனி, இந்நாட்டில்

"எயுமாறுபல் லுயிர்களுக் கெல்லையில் கருணைத்
தாயனுன் தனியாயின தலைவரைத் தழுவ
ஆயுநான்மறை போற்றநின் றருந்தவம்"

புரிந்த வரலாற்றைக் கூறுவோம்.

முன்னெரு காலத்து மந்தரமலையின்கட் பாசிவப்பெருமானும், மலைமடந்தையும் தனித் தமர்ந்து பல்வகைத் திருவிளையாடல் நிகழ்த்தியகாலை, தேவியார் பின்புறமெய்திப் பெருமானுடைய இருசுடர் தமக்காதாரமாகிய திருவிழிகளைப் புதைத்தருள, உலகமெல்லாம் இருண்மயமாகி, படைப்பாதித் தொழில் நின்று யாகமுதலிய நற்கருமங்களும் அழிந்து, முனிவருந் தேவரும் மற்றுளார் பலரும் மிகத் துயரமுற்றனர். எம்பெருமாட்டியும் சிறுபொழுதிற் றமது திருக்கரத்தை நீக்க எல்லாப் பொருள்களும் இன்பமுற்றன. யாவரும் மகிழ்ச்சியெய்தினர். அப்பொழுது பெருமான் இறைவியைப்பார்த்து, 'உமையே, நீ நமது கண்களைப் புதைத்தது நமச்குச் சிறுபொழுதேனும், உலகத்திற்கு அது பல்லூழிக் காலமாய், யாவும் நிலைதடுமாறி, அனைவருந் துன்பமுற்றனர். அதனல் நின்னைத் திமை தொடர்ந்தது. எனக்கும் எனது உண்மையடியார்கட்கும் உனக்கும் பாவம் அணுகுவதில்லையெனினும், நாம் வேதத்தில் விதித்த முறைகளை உலகங் கைக்கொள்ளுமாறு நாமுங் கைக்கொள்வதே முறையாகலின், நீ பூவுலகிற் சிறந்த நாவலந் தீவிற் பரதகண்டத்துத் தென்றிசையில், யாவருந் தனையடைவதும் மண்மேலென்று முள்ளதுமாய காஞ்சி நக

ரஞ் சேர்ந்து, ஆண்டு மாவமர்ந்த நம் இருக்கையில் பூசை புரிவா யாக' எனத் திருவாய் மலர்ந்தருள, தேவியாருந் தமது தலைவ ரைத் தணந்து செல்ல மனமில்லாதவராயும், சிவாகமவிதிப்படி அவரைப் பூசை புரிவதில் மகிழ்ச்சியுடையவராய்ப் பிரிந்து, காஞ்சி நகர்க்குறுகித் தம்பிரானிருக்கையை எங்கும்நாடவும் திரு விளையாட்டால் ஏகமாமுதல் எதிர்ப்படாதொழிய மாதவஞ்செய்து காண வேட்கைகொண்டு,

நெஞ்சமீசனைக் காண்பதே விரும்பி நிரந்தரந்திரு
வாக்கினி னிகழ்வ
தஞ்செழுத்துமே யாகவாளுடைய அம்மைசெம்
மலர்க் கரங்குவித் தருளித்
தஞ்சமாகிய அருந்தவம்புரியத் தரிப்பரேயவள்
தனிப்பெருங் கணவர்
வஞ்சநீக்கிய மாவின்மூலத் தின்வந்து தோன்றினர்
மலைமகள் காண.

அவ்வாறு தோன்றிய

ஆனாத பேரறிவா யகம்புறமு நிறைந்தெல்லாந்
தானாகி நின்றருளுந் தனிமுதலை ஏகம்பத்
தேனாரும் வழிபடுமா றெளிவந்த தெள்ளமுதை
ஊனாதி கசிந்துருக வுயர்பூசை புரிகுவாள்.

சுருக்க மிலா கமவிதியா லைவகைச் சுத்தியு மமைத்து
மருக்குழல்பூங் குழல்மடவார் மாறாது பணிகேட்ப
ஒருக்குமனத் தினளாகி உயர்கீர்த்தி மதிநீர்த்தக்
திருக்கிளர்பால் தயிரனைத்துஞ் சிவமனுவா லாட்டினள்.

நுழையிழைநூற் கலிங்கத்துத் திருமேனி நொய்தொற்றி
விழைதருகோ வணமரைநாண் மேதகுபட் டுடையணிந்து
குழைவிரைச்சந் தனச்சேறு கொட்டிமணத் துகளட்டி
இழைவருக்கந் திருமேனி யெங்குமெடுத் தலங்கரித்தாள்.

சுவையாறும் பழுத்தொழுகுந் தூயநால் வகையுண்டி
நவைதீர்ந்த பொற்கலத்தி னயத்தமுது செய்வித்தங்

கவிர்நுப நிபமுதற் பணிமாறி அன்பாற்றின்
இவர்தரு சைவாகமநூல் விதியெலா மியற்றினள்.

இவ்வாறு பூசைபுரிந்து, அந்நகரத்திலுள்ள பதுமமென்னு நாகத்தின் வேண்டுகோளால் அதுவாழும் பிலமே தனதிடமாக ஏற்று ஆண்டுத்தங்கி பூசைபுரிந்துவந்த மலைமகட்குப் பெருமான் மீண்டுந் திருவிளையாட்டாகவே திருவருள்புரியக்கருதி ஒருநாட் பூசைபுரியுங்காலத்து கம்பைமாநதி பெருகிவரச் செய்ய, இறைவி தடுத்தும் நில்லாது மேலோங்கக்கண்டு, இஃது எம்பெருமான் மீதும் வந்துறுமேயெனப் பெரிதுமஞ்சித் தமது இருகரங்களாலும் இறுகத்தழுவிக்கொள்ளத், திருமேனி குழைந்துகாட்டி வளைத்தழும்புடன் முலைச்சுவடணிந்து முன்னின்று காட்சி கொடுத்து, வேண்டுவரங்கள் வேண்டுவாயென, யான்செயும் பூசனையை எந்நாளும் ஏற்றருளவேண்டும், எக்காலத்தும் அழிவில்லாத இந்நகரில் யான் முப்பத்திரண்டு தருமங்களையுஞ் செய்ய அருள்புரியவேண்டும் என வேண்டினள். இறைவரும் அதற்கிசைந்து அறம்வளர்க்கும் வித்தாக இருநாழி நெல்லளிக்கப் பெற்று முப்பத்திரண்டு தருமங்களையும் வளர்த்த காஞ்சி நகரத்தைத் தன்னிடத் துடைமையாற் பெருமை பெற்றதும் இத் தொண்டை நாடே என்க.

(தொடரும்)

சிவதலங்களின் திருப்பெயர் வரலாறும் சீகாழிப் பன்னிரு திருப்பெயர் வரலாறும்

[கோயமுத்தூர் C. K. சுப்பிரமணிய முதலியார் B. A.,]

(முன் ௩௱௩௯-ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிவதலங்களின் திருப்பெயர்கள் என்னென்ன பொருள்களைக் காட்டி நிற்கின்றன என்பதும், அத்திருப்பெயர்களை உச்சரித்தலானும் நினைத்தலானும் எத்தனை பெரிய பயனுண்டாகும் என்பதும், அத்திருப்பெயர்கள் தமது தூயவரலாறுகளை நமக்கு நினைப்பூட்டிப் பெரும் பேற்றினைத் தேடித்தருகின்றன என்ப

தும் ஒருவாறு பொதுவகையாக முன் ஆராய்ந்தோம். இனிச் சீகாழியாகிய மூதூரைப்பற்றிச் சிறப்பு வகையாகச் சில பேசி இக் கட்டுரையை முடிப்போம்.

சிவதல வரலாறுகளை அறிவிக்க நமக்குத் தற்காலத்திலே சில புதிய போதகாசிரியர்கள் தோன்றியிருக்கிறார்கள். இவர்கள் யாரென்றால் இரயில்வேக்காரர்களும், தபாலாபீசுக்காரர்களும், வண்டிக்காரர்களும் இவர்கள் போன்றவர்களுமே. சிவதலங்களின் பெயர்களைப் பலவாறு சிதைவுபடுத்தி இன்னார் வழங்குவர். அதனைப் பின்பற்றியே நாமும் அவற்றின் முன்னைச் சிறந்த பொருள்களின் உண்மையை எட்டுணையேனும் நினையாமல்சிதைவுபடுத்தி வழங்குவோமாயினோம். எடுத்துக்காட்டாகத் திருவாரூர் என்பது சோழநாட்டுத் திருத்தலங்களிலே சிறந்துவிளங்குவதாம். காவிரிக்குத் தென்கரையிலே 87-வது தலம். அத்திருப்பெயரைச் சிதைத்து இரயில்வேயும் தபாலாபீசும் திருவாலூர் என வழங்க அப்படியே நாமும் திருவாலூர் என்றே பேசவும் எழுதவும் தொடங்கிவிட்டோம். திருவெறும்பியூரைத்(காவிரிக்குத் தென்கரையிலே எழாவது தலம்) திருவரம்பூர் என்று இரயில்வேக்காரர் எழுதிவிட அவ்விதமே நாம் வழங்கி வருகிறோம். அத்தனை பெரிய திருவாரூருக்கு 'வால்' வைத்து வாலூர் ஆக்கியவர்கள் சீகாழியைச் சும்மா விடுவார்களா? சீகாழி இவர்கள் கையிலே சிய்யாழி ஆய்விட்டது. நாமும் அவ்விதமே வழங்குவோ மாயினோம். என்ன கொடுமை! என்ன புதுமை! என்ன அவமானம்! நமது திருத்தலங்களின் பெயர்களைத் தானும் சரியாகச் சொல்லவும் வழங்கவும் தெரிந்துகொள்ளாத நிலைமையில் நாமும் நம்மைச் சைவர்கள் என்றும் தமிழர்கள் என்றும் சொல்லிக்கொள்ள வேண்டியிருக்கிறது. இன்னார்களை நாம் என் திருத்த முயலக் கூடாது? நாம் தெரிந்து கொண்டாலன்றோ பிறரைத் திருத்த முயலலாம். நிற்க.

சீகாழிக்குப் பன்னிரு பெயர்கள் உண்டு என்பதை நேயர்கள் அறிவார்கள். ஒரு பொருளைக் குறிப்பதற்குப் பலபெயர்கள் இருப்பானேன்.? ஒருபொருள் குறித்த பலசொற்களும் பல பொருள் குறித்த ஒரு சொல்லும் ஒரு மொழியிலே இருத்தல்

அம்மொழிக்கு அழகு தருவனவாகிய இயல்புகளாகும் என்பார் ஒரு சாரார். அற்றன்று; அவை அம்மொழியின் குறைபாட்டினை வெளிப்படுத்துவனவாம் என்பர் வேறுசிலர். பலபெயர்களால் அழைக்கப்படுதலாலேயே ஒருபொருள் ஏற்றமுடையதாய் விடுமோ என்று வாதிப்பர் பின்னுஞ்சிலர். அது எப்படியாயினும் ஆருக. அதுபற்றிய விசாரணை நமக்கு இங்கே வேண்டுவதில்லை. ஆனல் இங்குச் சீகாழிக்குப் பன்னிரு திருப்பெயர்கள் இருத்தல் அவ்வாறு ஒரு பொருள் குறித்த பல சொல்லாகவே குறித்து விடலாமோ எனின்; கூடாது. இப்பன்னிரு திருப்பெயர்களும் பொருட்டன்மையிலே ஒன்றுகிய ஒரே தலத்தைக் குறிப்பன வாயினும் வெவ்வேறு காரணம்பற்றி வெவ்வேறு காலங்களிலே அத் திருத்தலத்திற்கு அமைந்த பெயர்களாம்.

இத்திருத்தலத்திற்குப் பன்னிரண்டு திருப்பெயர்கள் உள்ளன என்பதையும் அவற்றை எவ்வாறு வைத்துப் பாராட்டுதல் வேண்டுமென்பதையும் இத்தலத்தே திருவவதரித்த பரமாசாரிய மூர்த்திகளாகிய நமது திருஞானசம்பந்தப் பெருமான் எவ்வாறு நமக்குக் காட்டி யருளியிருக்கின்றார்கள் என்று பார்ப்போம். அவர்கள் திருப்பதிகங்களை யெல்லாம் பதினொரு திருப்பாசுரங்களாக அமைத்தருளும் நியதியுண்டு. அதிலேயும் எட்டாவது திருப்பாட்டிலே இராவணன் பெரும்பிழை செய்தானாயினும் அடைந்து உய்ந்த ஆக்கப்பாட்டினையும், ஒன்பதாவது திருப்பாட்டிலே பிரம விட்டுணுக்கள் அறிந்துய்ந்த படியினையும், பத்தாவது திருப்பாட்டிலே சமணர் புத்தர் மொழிகள் ஏதந்தருவன என்பதையும் ஆக இம்முறையே அமைத்தருளுவது காணலாம். பதினொன்றுவதாகிய கடைசித் திருப்பாட்டிலே தமது திருப்பேயர் இலச்சினையைப் பொறித்துப் பதிகத்துப் பயன் சொல்லித் திருக்கடைக் காப்பாக வைத்துப் பதிக முடித்தருளுவர். இந்நியதியும் வைப்பும் சுவாமிகள் திருப்பதிகங்களிலே எங்குங் காணலாகும். இந்தப் படி சுவாமிகள் திருப்பதிகங்களிலே பாட்டு முறை வைப்புள்ளதை ஸ்ரீசேக்கிழார் சுவாமிகள் பல இடங்களில் எடுத்துக் காட்டியிருக்கின்றார்கள். எட்டாவது பாட்டிலே இராவணனைக் குறிப்பது பற்றி

"மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும் வந்தடையிற்
கண்ணுதலான் பெருங்கருணை கைக்கொள்ளு மெனக்காட்ட
எண்ணமிலா வல்லரக்க னெடுத்துமுரிந் திசைபாட
அண்ணலவற் கருள்புரிந்த வாக்கப்பா டருள்செய்தார்"

என்றும், ஒன்பதாவது பிரம விட்டுணுக்களைக் குறித்த பாட்டினைப்பற்றி,

"தொழுவார்க்கே யருளுவது சிவபெருமா னெனத்தொழார்
வழுவாய மனத்தாலே மாலாய மாலயனும்
இழிவாகும் கருவிலங்கும் பறவையுமா யெய்தாமை
விழுவார்க ளஞ்செழுத்துந் துதித்துய்ந்த படிவிரித்தார்."

என்றும், பத்தாவது பாட்டாகிய சமணர் புத்தர்களைப்பற்றிய பாட்டினைப்பற்றி,

"வேதகா ரணராய வெண்பிறைசேர் செய்யசடை
நாதர்நெறி யறிந்துய்யார் தம்மிலே நலங்கொள்ளும்
போதமிலாச் சமண்கையர் புத்தர்வழி பழியாக்கும்
ஏதமே எனமொழிந்தார் எங்கள்பிரான் சம்பந்தர்"

என்றும், இவ்வாறு பதிகம் நிறைவித்தருளியபின் அதன்மேலே உள்ள பதினொன்றாவது திருப்பாட்டினை

"திருப்பதிகம் நிறைவித்துத் திருக்கடைக் காப்புச்சாத்தி"
என்றும், விரித்து வகுத்துக் காட்டியருளினார்கள்.

பதிகம் என்பது பத்துப் பாட்டுக் கொண்ட தொகை எனப் பொருள் பெறும் என்பதைப் "பாடியவப் பாட்டான பத்தும் பாடனிரம்பிய பின்னும்" (பெரிய புராணம் - சம்பந்தர்-582) என்ற திருவாக்கானும் அறியலாம். சுவாமிகள் திருப்பதிகப் பாட்டு முறை வைப்பானது மாறுபடாத இத்தன்மையையும் பொருள் கோள்களையும் கொண்டதாம். பத்தாவது திருப்பாட்டிற்கு "தொடுத்த வெஞ்சமண்பாட்டு" என்ற பெயரே வைத்து அருளினார்கள் ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகள். சீகாழிக்குச் சுவாமிகள் அருளியனவாக இப்போது நமக்குக் கிடைத்துள்ளன 67

திருப்பதிகங்களாகும். இவற்றிலே திருப்பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு ஆகிய தனித்தனித் திருப்பெயர்களை அமைத்து அந்த அந்தப் பெயராலே தனித்தனிப் பதிகங்கள் பல உள்ளன. இவையெல்லாம் நாம் மேலே குறித்த நியதிப்படி பதினொரு திருப்பாசுரங்களையே உடையன. ஆனால் இத்தலத்தின் பன்னிரண்டு திருப்பெயர்களையும் கொண்டு விளங்கும் பதிகங்களும் பல உண்டு. இவை பல்பெயர்ப்பத்து, திருவிருக்குக்குறள், திருமொழிமாற்று, திரு ஏகபாதம், திருச்சக்கரமாற்று (இரண்டு பதிகங்கள்), திருக்கோமூத்திரி, வழிமொழித்திருவிராகம், தீரு ஈரடி, திருவியமகம் ஆகிய பத்துத் திருப்பதிகங்களாம். இவற்றிலெல்லாம் சுவாமிகள் தமது பதிகங்களைப் பதினொரு பாட்டாக அருளுவதாக நாம் மேலே கண்ட நியதியின் மேற்பட்டுச் சென்று திருப்பெயர்கள் ஒவ்வொன்றுக்கு ஒவ்வோர் திருப்பாட்டாக பன்னிரண்டு திருப்பாட்டுக்களிலே பதிக முடித்தருளினார்கள். எனவே, தனித்தனித் திருப்பெயர்களாலே பதிகம் போற்றியருளிய சுவாமிகள் இத்தலத்துப் பன்னிரு பெயர்களையும் ஒருங்கே நாம் போற்றியுய்தல் வேண்டுமென்று காட்டுவதற்குத் திருவுளங்கொண்டு பன்னிரண்டு திருப்பாட்டுக்களாலே பதிகம் கட்டளையிட்டருளினார்கள் என்றால் இத்தலத்திற்குப் பன்னிரண்டு திருப்பெயர்கள் உண்டு என்பதற்கும் அவற்றை நாம் எவ்வாறு பாராட்டிப் போற்றல் வேண்டும் என்பதற்கும் வேறு ஆதாரந் தேடவும் வேண்டுமோ!

இத்திருப்பெயர்கள் எப்போது வந்தன? உலகிலே ஊழிகள் பல உண்டாகும். அவ்வூழி முடிவிலே எல்லாவூர்களும் அழிந்துபடும். ஆனால் இத்திருத்தலம் மட்டும் அழியாது ஊழி வெள்ளத்திலே தோணியாகி மிதக்கும். அத்தோணியிலே வீற்றிருப்பார்கள் திருத்தோணியப்பரும் பேரிய பிராட்டியாரும். இக்காரணம் பற்றியே இதற்குத் தோணிபுரம் என்று ஒரு பெயர் வந்தது. இதுபோல ஊழிகள் தோறும் வெவ்வேறு காரணங்களால் இத்தலம் வெவ்வேறாகப் பெயர்பெற்று இப்படியாகப் பன்னிரண்டு திருப்பெயர்களைக் கொண்டு விளங்குவதாகும் இத்திருத்தலம். இது

"துயரிலங்கு முலகிற் பலவூழிகள் தோன்றும் பொழுதெல்லாம்
பெயரிலங்கு பிரமாபுர மேவிய பெம்மா னிவனன்றே"

என்ற திருஞானசம்பந்த சுவாமிகள் திருவாக்கினால் அறியப்படும்.

"வசையில்காட்சி யிசைநனிவிளங்க
முன்னாணிகழ்ந்த பன்னிருகத்து
வேறுவேறுபெயரி னூறின்றியன்ற
மையறுசிறப்பிற் றெய்வத்தன்மைப்
புகலி.................."

பதினொராந் திருமுறை-பட்டணத்துப்பிள்ளையார் (திருக்கழுமல மும்மணிக்கோவை—0)

இப்பன்னிரு பெயர்கள்தாம் யாவை ?

'பிரமபுரம் வேணுபுரம் புகலிபெரு வெங்குருநீர்ப்
பொருவில்திருத் தோணிபுரம் பூந்தராய் சிரபுரமுன்
வருபுறவஞ் சண்பைநகர் வளர்காழி கொச்சைவயம்
பரவுதிருக் கழுமலமாம் பன்னிரண்டு திருப்பெயர்த்தால்"

என்பது சேக்கிழார் சுவாமிகள் திருவாக்கு.

(1) பிரமபுரம் (2) வேணுபுரம் (3) புகலி (4) வெங்குரு (5) தோணிபுரம் (6) பூந்தராய் (7) சிரபுரம் (8) புறவம் (9) சண்பை (10) காழி (11) கொச்சைவயம் (12) கழுமலம் என்பன இத் திருப்பெயர்களாம். இவற்றை எந்த வரிசையிலே வைத்துச்சொல்ல வேண்டும் என்றால் மேலே காட்டிய இந்த வரிசையிலேதான் சொல்லவேண்டும் என்று தெரிகிறது. இத்தலம் ஊழிகள் தோறும் ஒவ்வோர் பெயர் பெற்றதாக மேலே கண்டோமாகலின் இப்பெயர்கள் அந்தக்காலக்கிரமத்திலேகிடைத்தன. அந்தப்படி காலக்கிரமத்திலே வரிசைப்படுத்தி (Chronological Order) வைத்தபடியே நாம் வழங்குவது தகுதி. இவ்வரிசையை மாற்றி வழங்கலாகாது. ஏன்? இதுதான் திருஞானசம்பந்த சுவாமிகளாகிய நமது பரமாசாரியரின் திருவுள்ளம் என்று தெரிகிறது.

சுவாமிகள் இப்பன்னிரு பெயர்களையும் வைத்துக் கட்டளையிட்டருளிய (மேலே நாம் குறித்த) பத்துப் பதிகங்களிலேயும் இத்திருப்பெயர்களை இவ்வரிசையிலேயே வைத்து அருளியிருக்கின்றது காணத்தக்கது. பல்பெயர்ப்பத்து, திருவிருக்குக்குறள், திருமொழிமாற்று, திருஏகபாதம், வழிமொழித் திருவிராகம், திருஈரடி, திருவியமகம் ஆகிய இத்திருப்பதிகங்களிலேயெல்லாம் இக் குறித்த வரிசையிலேயே இத்திருப் பெயர்களைக் காணலாம். திருவெழுகூற்றிருக்கையிலேயும் இவ்வரிசையிலேயே திருப்பெயர்கள் விளங்குவனவாம். திருச்சக்கரமாற்று இரண்டு திருப்பதிகங்களிலும் திருக்கோமுத்திரிப்பதிகத்திலும் இரண்டு முதலாகிய திருப்பாட்டுக்களில் இவ்வரிசையானது அந்த அந்தப்பதிகங்களிற் கொண்ட அணியின் பொருட்டு மாற்றிவைத்திருப்பதாகக் காணப்படினும் முதற்பாட்டிலே இவ்வரிசையே வைத்திருப்பது காணலாகும். இப்பதிகங்களிற் குறித்த அணிகளின்படி தொடங்கிய நிலைக்கே பின்னர் வந்து கூடும்படியான அமைப்பு உள்ளதாகையால் இவை முழுதும் அவ்வரிசை பிறழாமையும் காணலாகும்.

இவ்வரிசையானன்றி இத் திருப்பெயர்கள் மாற்றிச் சொல்லத்தக்கனவல்ல என்பதற்குச் சுவாமிகள் வேறு சில குறிப்புகளும் வைத்தருளியிருக்கின்றார்கள்.

"நான்முக னாதியாய பிரமாபுரத்து
மறைஞான ஞானமுனிவன்" (கோளறுதிருப்பதிகம்-௧௧)

நான்முகன் பூசித்த காரணத்தினாற் பெற்ற பிரமாபுரம் என்பதைத் தனக்குரிய திருப்பெயர்களில் ஆதியாகிய திருப்பெயராகக் கொண்டு விளங்குவது என்று பொருள் கொள்ளக்கிடக்கின்றது காணலாம்.

"………ஒன்றிரண்டோரு மூன்றோடுசேர்பதி
பூவிலந்தணனொப்பவர்பூந்தராய்போற்றுதுமே"

காந்தாரபஞ்சமம் - பூந்தராய் - (செ. ௨)

என்றதிருப்பாட்டிலே பூந்தராய் என்பதைத் தனக்குரிய ஆறுவது திருப்பெயராகக்கொண்டு விளங்கும் தலம் என்ற பொருள் பெறுகின்றோம்.

"கடல்வரையோதமல்குகழிகானல்பானல்கமழ்காழியென்றுகருதப்
படுபொருளாறுநாலுமுளதாகவைத்தபதியானஞானமுனிவன்"

பியந்தைக்காந்தாரம் : திருநனிபள்ளி - (சே. ௧௧)

என்ற திருப்பாட்டிலே காழி என்பதனைத் தனக்குரிய பெயர் முறையிலே பத்தாவது திருப்பெயராகக் கொண்டு விளங்கும் என்னும் பொருள் பெறுகின்றோம். மேலே கண்ட வரிசையிலே பூந்தராய் ஆறாவது திருப்பெயராகவும் சீகாழி பத்தாவது திருப்பெயராகவும் உள்ள அமைப்பினைக் காண்க. இதுபற்றியே சேக்கிழார் சுவாமிகளும் மேற்குறித்ததிருப்பாட்டிலே இவ்வரிசையிலே திருப்பெயர்களை அமைத்து அருளினார்கள்.

இனி இத்திருப்பெயர்களின் வாலாறுகளைப் பற்றிச் சிறிது ஆராய்வோம். இவ் வரலாறுகளை திருஞானசம்பந்த சுவாமிகள் பல்பெயர்ப்பத்து, வழிமொழித் திருவிராகம் என்ற இரண்டு திருப்பதிகங்களிலேயும் குறிப்பாகக் காட்டியருளி யிருக்கின்றார்கள். திருப்பெயர்கள் வந்த வழியை மொழிவதனாலே அந்தத் திருப்பதிகத்திற்கு வழிமொழித் திருவிராகம் என்ற பெயர் அமைத்திருக்கிறார்கள் போலும். அன்றியும் அத் திருப்பெயர்களின் வழியே ஒவ்வொருபாட்டும் பாட்டின் அடிகளும் ஒவ்வொரு சீரும் எதுகையாக அமைந்துள்ள சந்த இனிமையையும் காணலாம். இன்னும் அங்கங்கே பற்பல பதிகங்களினும் இவ் வரலாறுகளை ஒரேவழிச் சுட்டியருளியு மிருக்கின்றார்கள்.

௧. பிரமபுரம்: பிரமதேவர் பூசித்துப் பேறுபெற்ற காரணத்தால் வந்தபெயர்.

"ஏடுடைய மலரான் முனைநாட்பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுரம்"

என்பது சுவாமிகளது முதல் திருப்பாட்டு.

"சரியாநாவின் வேதகிதன் றாமரை நான்முகத்தன்
பெரியான் பிரமன் பேணியாண்ட பிரமபுரத்தானே"

பல்பெயர்ப்பத்து—(௧)

“வரமருள வரன்முறையி னிரைநிறைகொள்
வருசுருதி சிரவுரையினாற்
பிரமனுய ரரனெழில்கொள் சரணவிணை
பரவவளர் பிரமபுரமே”

வழிமொழித் திருவிராகம்—க

உ. வேணுபுரம்: சூரபன்மன் பூசித்தபோது சிவபெருமான் வேணு=(மூங்கில்) வாக முளைத்து அருள் புரிந்தசரிதம் புராணத்துக் கேட்கப்படும். அல்லாமலும், தேவேந்திரன் தனது ஆசாரியனிடத்தே அபசாரப்பட்ட பழியினை நீக்கிக்கொள்ளவும் விருத்திராசுரனைக் கொன்ற பழியினைப் போக்கிக்கொள்ளவும் அகத்தியமுனிவர் திருவார்த்தையின்படி தேவலோகத்திலே இருந்து வேணு=(மூங்கில்) வழியாக இத்தலத்தே இறங்கியடைந்து பூசித்தான் என்ற சரித வரலாறும் கேட்கப்படுகிறது. இக்காரணங்களினாலே இத்தலம் வேணுபுரம் என்று பெயர் பெற்றது.

“இயலானடாவியின்பமெய்தி இந்திரனாள்மண்மேல்
வியலார்முரசமோங்குசெம்மைவேணுபுரத்தானே—”

பல்பெயர்ப்பத்து—உ

“..............................சேணமரர் கோன்
வேணுவினை யேணிநகர் காணிறிவி காணநடு வேணுபுரமே”

வழிமொழித்திருவிராகம்—உ

இந்திரன் சூரபன்மனாதியர்க்குப் பயந்து தன்தேவியோடும் விண்ணுலகைவிட்டு இம்மண்ணுலகில் வந்து

“......தெக்கினதேயம் புக்குப்
பத்து டனிரண்டு நாமம் படைத்ததொல்காழி நண்ணி
இத்தலமினிதே என்னா இருந்தனன்......”

கந்தபுராணம் இந்திரன் கரந்துறை படலம்—ருக

அங்கு ஒரு நந்தனவன முண்டாக்கிச் சிவபெருமானை வழிபட்டிருக்குங்காலைச் சூரன் விடுத்த ஒற்றர்கள் வரக்கண்டு பயந்து தன்தேவியோடு வேணுவாகி (மூங்கில் உருவமெடுத்து) மறைந்து

தவஞ்செய்து கொண்டிருந்த வரலாறும் கந்தபுராணத்துட் கேட்கப்படும்.

"..........அமரர் கோன்றுணைவி யோடு
மற்றவன் வேறுவாகி மறைந்து நோற்றிருந்தான் மாதோ"

கந்தபுராணம் ஷ்டி படலம்—சச

மூன்றாவது புகலி:—சூரபன்மனுதியர்களால் கடுந்துன்பமடைந்த தேவர்கள் புகலடைந்து அடைக்கலமாக வந்து, தங்கிச் சிவபெருமானை இத்தலத்தே வழிபட்டமையால் புகலி எனப் பெயர் பெற்றதாம்.

"அகலாதுறையுமாநிலத்திலயலின்மையாலமரர்
புகலான்மலிந்தபூதகலி......" பல்பெயர்ப்பத்து—ங

இவ்வாறு புகலடைந்த தேவாதியர் பரமேசுவரனது திருவாணையின்படி (தமது பகைவர்கள் அழியும்பொருட்டு) முருகக் கடவுள் திருவவதரிக்க வேண்டுமென்னும் கருத்துடன் இத்தலத்தே சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்திருந்தனர் என்பது

"பகைகளையும்வகையிலறுமுகவிறையை
மிகவருளநிகரிலிமையோர்
புகவுலகுபுகழவெழிறிகழநிகழலர்பெருகு
புகலிநகரே" வழிமொழித் திருவிராகம்—ங

என்ற திருப்பாட்டினுல் விளங்கும்.

நான்காவது வெங்குரு:—பிரமதேவரால் இகழப்பட்ட அசுர குருவாகிய சுக்கிரன் நாரதமுனிவரிடம் உபதேசம் பெற்று இத்தலத்தை யடைந்து பூசித்துத் தேவகுருவுக்குச் சமானமான தன்மையைப் பெற்றுர். அல்லாமலும் யாவரும் தன்னைக் கொடியன் என்று இகழும்படியான பழி நீங்கும்படி எமதருமராசன் பூசித்துப் பூர்வ உணர்வுபெற்று மோனமா யிருக்கும் அருளை இத்தலத்தே பெற்றுர் என்பதும் ஒருவரலாறு ஆகும். இது

"செங்கோனடாவிப்பல்லுயிர்க்குஞ்செய்வினைமெய்தெரிய
வெங்கோத்தருமன்மேவியாண்டவெங்குரு......"

என்ற பல்பெயர்ப்பத்து—ச-வது திருப்பாசுரத்தால் விளங்கும்.

ஐந்தாவது தோணிபுரம்:—யுகக்கடை நாளிலே உலகமெல்லாம் பெருவெள்ளத்துள் அழுந்தும் பிரளயசலதியிலே, தான் அழியாமலும் ஆழாமலும் இருந்து பிரணவ உருவமாகிய தோணியாய் மிதக்க அதிலே சிவபெருமான் பெரிய பெருமாட்டியுடன் வீற்றிருக்கப்பெற்ற காரணத்தால் திருத்தோணிபுரம் எனப் பெயர் பெற்றது. ஆலயத்திலே திருத்தோணியாகிய வமைப்பு இன்றும் காணத்தக்கதாம். அவ்வாறு தோணியாக மிதந்த காலத்திலே தேவர்கள் பறவை உருவெடுத்து வந்து தாங்கி நின்றார்கள் என்பது

"பார்கொண்டுமூடிக்கடல்கொண்டஞான்றுநின்பாதமெல்லாம்
நாலஞ்சு புள்ளினமேந்தினஎன்பர்"

என்ற திருநாவுக்கரசு சுவாமிகள் திருவிருத்தத்தா லறியலாம்.

ஊழிநீர்ப் பெருக்கிலே தோணியாக மிதந்த வரலாறு:—

"அணிநீருலகமாகியெங்குமாழ்கடலாலழுங்கத்
துணிநீர்பணியத்தான்மிதந்ததோணிபுரம்"

பல்பெயர்ப்பத்து—ரு

"..வணிமுறையிற்
பாணியுலகாள மிகவாணின்மலி தோணிநிகர் தோணிபுரமே"

வழிமொழித்திருவிராகம்—ரு

'பாணிமூவிலகும்புதையமேன்மிதந்ததோணிபுரத்துறைந்தனே...'

(திருவெழுகூற்றிருக்கை)

"கடல்கொளமிதந்தகழுமலவளநகர்"

என்ற சுந்தரமூர்த்திகள் திருக்கழுமலத் தேவாரமாதிய திருவாக்குகளும் பிறவும் வலியுறுத்துவனவாம்'

ஆறுவது பூந்தராய்:—இரணியாக்கன் என்னும் அரக்கனை விட்டுணு மூர்த்தியானவர் வெள்ளைப்பன்றியாக உருவெடுத்து வந்து கொன்று தன் கொம்பினாலே அவன் ஒளித்து வைத்த

பூமியைத் தாங்கி வந்து, அந்தக்கொலைப் பழி போகுமாறு பூசித்த காரணத்தால் பூந்தராய் எனப்பெயர் பெற்றது. (பூ-பூமி, தராய் - தரிக்கப்பெற்றது?)

"அராமிசை யிராதெழி றராயர பராயண வராகவுருவா
தராயனை விராயெரி பராய்மிகு தராய்மொழி விராயபதியே"
வழிமொழித்திருவிராகம்—சு

ஏழாவது சிரபுரம்:—தலையினுற் பூசிக்கப்பெற்ற தலம்-தலையாவது இராகு: தேவர்கள் அமுதுண்டகாலத்திலே சயிங்கேயன் என்னும் ஒரு அசுரன் வேற்றுருவந் தாங்கி வந்து அவர்களினிடையே யிருந்து அமுதமுண்ணப் புகுந்தான். அவனைச் சூரியன் காட்டிவிடவே அவன் விட்டுணு மூர்த்தியால் வெட்டுண்டனன். அவ்வாறு வெட்டுண்ட தலை இராகு என்றும் உடல் கேது என்றும் பெயர் பெற்று உள்ளன என்பது புராணவரலாறு. எனவே, இராகு பூசித்து ஒன்பது கோள்களில் ஒன்ருயிருக்கும் பேறு பெற்றமையால் சிரபுரம் எனப் பெயர் பெற்றதாம்.

"பரவமுது விரவவுடல் புரணமுறு மரவையரி சிரமரியவச்
சிரமான சரணமவை பரவவிரு கிரகமமர் சிரபுரமதே"
வழிமொழித்திருவிராகம்—எ

எட்டாவது புறவம்:—புரு பூசித்த காரணத்தால் வந்த பெயர். புருவாவது அக்கினிதேவன். முன்னொருகாலத்திலே இந்திரன் பருந்து உருவமும் அக்கினிதேவன் புரு உருவமும் எடுத்து சிபிச்சக்கிரவர்த்தியைச் சோதிப்பதற்காக புருவைப் பருந்து துரத்திக்கொண்டுவர புரு சிபியினிடம் அடைக்கலம் புக்கது. பருந்து தனது இரையினைக்கேட்கவே அரசன் அடைக்கலம் புக்க பொருளைக் கொடுத்தல் தகாது என்று அதற்குச் சமனுகத் தனது தசை கொடுப்பதாக இசைந்து அவ்வாறே தனது தசையை அறிந்து துலையிலிட்டுப் புறவின் எடைக்குப் போதாமை கண்டு தான் துலையேறித் தன் புகழை நிலை நிறுத்தினன். இச் சரிதம்,

"துலையிற் புறவினிறை யளித்த சோழர்"

பெ. புராணம்-கோச்செங்கட்சோழ நாயனர் புராணம்—க

என்று ஸ்ரீ சேக்கிழார் பெருமானல் விதந்து பாராட்டப் பெற்றது. புரு உருவெடுத்த அக்கினி சிபியினிடத்துச் செய்த அபசாரமாகிய அப்பாவம் போகுமாறு இத்தலத்திலே பூசித்துப் பேறுபெற்றனன். சிபியினுடலும் முன்போல வளர்ந்து ஒளி வீசிற்று.

"குறைவின்மிக நிறைதையுழி மறையமரர்
நிறையருள முறையொடுவரும்
புறவனெதிர் நிறைநிலவு பொறையனுடல்
பெறவருளு புறவமதுவே"

வழிமொழித்திருவிராகம்—அ

மேலே குறித்தபடி சிபியின் அற்புத சரிதம் முழுமையும் புறவம் என்னும் இத்திருப்பெயர் காட்டி நிற்கிறது.

ஒன்பதாவது சண்பை:—உம் குலத்தவன் ஒருவன் வயிற்றிற் பிறந்த இருப்பு உலக்கை உங்களை நாசம் செய்யும் என்று கபிலமுனிவர் இட்ட சாபப்படி ஒரு இருப்புலக்கை பிறந்தது, அது தம் குழந்தை அழிக்காதவண்ணம் பொடி செய்து கொட்டிவிடவும் அந்தத் துகள் சண்பைப்புல்லாக (சம்பை என வழங்கும்) முளைத்தன. அவற்றை ஆயுதமாகக் கொண்டு ஒருவர்க்கொருவர் போர்செய்து யாதவர்கள் மடிந்தனர். இக்கொலைப்பழியானது தம்மை யணுகாத வண்ணம் கண்ணபிரான் பூசித்துப் பேறுபெற்றனர். சண்பை காரணமாக வந்த பழி போக்கியதாற் சண்பையாயிற்று.

"மண்பரிய மொண்பொழிய நுண்புசகர்
புண்பயில விண்படரவச்
சண்பைமொழி பண்பமுனி கண்பழிசெய்
பண்புகளை சண்பைநகரே"

வழிமொழித்திருவிராகம்—கூ

பத்தாவது சீகாழி:— சிவபெருமானுக்கு நடனத்திலே தோல்வியுற்ற காளியம்மையார் பூசித்துப்பேறுபெற்றதுடன் இத்தலத்தைக் காவல் செய்கின்றார் என்ற காரணத்தாலும் காளிதன் என்னும் பாம்பு பூசித்துக் காவல்புரிகின்ற காரணத்தாலும் இப்பெயர் பெற்றது என்பது வரலாறு.

"கிழிசைகொண் மேனுலகில் வாழரசு சூழரசு வாழவரனுக்
காழியசில் காழிசெய வேமுலகி லூழிவளர் காழிநகரே"

வழிமொழித்திருவிராகம்—௨

"அழலாயுலகங் கவ்வைதீர வைந்தலை நீண்முடிய
கழனுகரையன் காவலாகக் காழி யமர்ந்தவனே"

பல்பெயர்ப்பத்து—௨

"மோடி புறங்காக்குமூர்"　　　திருச்சக்கரமாற்று—அ

பதினொன்றாவது கோச்சைவயம்:—ஆற்றினிடையே பராசரர் மச்சகந்தியைப் புணர்ந்ததனாற்பெற்ற தூர்க்கந்தமும் பழியும் போகும்படி பூசித்து அவ்வாறே பேறுபெற்றார் என்பது சரிதம். அதனாலே இத்தலம் கோச்சைவயம் எனப் பெயர்பெற்றதாம்.

"மச்சமத நச்சிமத மச்சிறுமி யைச்செய்தவ வச்சவிரகக்　[மே"
கொச்சைமுர வச்சர்பணி யச்சுரர்க ளைச்சிமிடை கோச்சைவய

வழிமொழித்திருவிராகம்—௧௧

பன்னிரண்டாவது கழுமலம்:—உரோமச முனிவர் இத்தலத்தை யடைந்து ஞானோபதேசம் பெற்று தம் மலங் கழுவப்பெற்று விளங்கியதாற் கழுமலமாயிற்று. "தங்கண் மலங்கழுவுவார்வந்து சார்தலினால், எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த பொங்குமடுவில்" என்ற திருவாசகச் சொல்லாட்சியையும் காண்க.

"ஒழுகலரி தழிகலியி லூழியுலகு
பழிபெருகு வழியைநினையா
முழுதுடலி லெழுமயிர்க டழுவுமுனி
குழுவினொடு கெழுவுசிவனைத்

தொழுதலகி லிழுகுமல மழியும்வகை
கழுவுமுரை கழுமலநகர்''

வழிமொழித்திருவிராகம்—கஉ

இதுகாறும் கூறியவாற்றாற் பெற்றமுடிவுகளாவன:—

சிவதலங்களின் திருப்பெயர்கள் வெறும் இடுகுறிப்பெயர்கள் அல்லாது காரணவகையாலே பலபொருள்களைக் காட்டிநிற்கின்றன. அவைகளைச் சிந்திப்போமானால் பெரும்பயன் விளையும். மக்களில் உயர்ந்தோர் தாழ்ந்தோர் தேவர்கள் நாகர்கள் முனிவர்கள் அரக்கர்களாதிய உயர்திணையுயிர்களும், விலங்கு பறவையாதி அஃறிணையுயிர்களும்சிவபெருமானை இப்பூவுலகத்திலே ஒவ்வோர் தலங்களிலே வழிபட்டுப் பேறுபெற்றன. சிவபெருமான் வீரங்கள் செய்ததும் அடியாரைக் காத்த கருணைத்திறத்தினை வெளிப்படுத்தும் தலங்களும் பலவுள்ளன. இத்தலங்களெல்லாம் தத்தம் பெயர்வகையினாலேயே சிவபெருமானுடைய பெருங்கருணையையும், அவர் தம்மை அன்பாயடைந்தார்கள்யாவராயினும் பேரருள் செய்து நிற்கும் எளிமையையும், உயிர் வருக்கங்கள் அவரையே அடைந்து கதிபெறவேண்டிய கடமையையும் காட்டிநிற்கின்றன. அவைகள் அவ்வநாட்டிலே வரிசையாகவைத்து எண்ணப்பெறும். இவற்றுள்ளே சீகாழி என்பது ஒரு சிறந்த திருத்தலம். அது பன்னிரண்டு திருப்பெயர்களையுடையது. அப் பெயர்கள் ஒவ்வோர் ஊழியிலேயும் முறையே காலக்கிரமத்தின் வரிசையாகப் பெறப்பட்டன. அவற்றின் வரிசையில் மாற்றி வைத்து எண்ணுவதுதகாது. அம்முறையிலேயே திருஞானசம்பந்தசுவாமிகள் அமைத்து வகுத்தருளித் தனித் தேவாரப் பதிகங்களும் கட்டளையிட் டருளியிருக்கின்றார்கள். இப்பன்னிருபெயர்களும் சிவபெருமான் திருவருள் சுரந்த ஒவ்வோர் சரித வரலாறுகளைக் காரணமாகக்கொண்டு பெறப்பட்டன. இத்திருத்தலப்பெயர்களை அவ்வரிசையிலேயே வைத்தெண்ணிப் பயனடைதல் அறிஞர் கடனாகும்.

முற்றிற்று

அகம் புறம்

[வேலூர். க. ப. சந்தோஷம் B.A., L.T.,]

(௪௭௮-ம் பக்கத் தொடர்ச்சி)

அகப்பட்டது என்று சொல்லுங்கால், ஒருபொருள் பொறிகளின் வழியாய் அகத்திற்கு எட்டிற்று என்பது கருத்து. முன் கண்டவாறு ஒரு பொருள் அகத்திற்கு எட்டாவிடின் அது இருந்தும் இல்லாததேயாகும். அகம் என்பது யாது? அது பொறி புலன்களைத் தன்னிலடக்கி யவற்றினின்றுந் தனித்தியங்கு மொன்று. ஏனெனின், அகம் பாராவழி, கண்கள் பாரா, காதுகள் கேளா. செவியிற்பட்டதும் கண்ணிற்பட்டதும் அகத்திற் படா தொழிதலுமுண்டு. யாதாயினு மொன்று காலிற்பட்டது அல்லது கையிற்பட்டது என்று சொல்வதோடொக்க உளத்திற் பதிந்ததை அகப்பட்டது என்று சொல்லுகிறோம். மேற்கூறியவற்றால் 'அகம்' என்பதும், 'நான்' என்பதும் ஒரு பொருட் கிளவிகள் என்பது தெரிகிறது. வடமொழியில் 'அகம்' என்ற சொல் (Latin Ego) நான் என்று பொருள் தருவதைத் தமிழர் ஆராய்வாராக,

'அகப்பட்டது' என்பதன் பொருளுக்கிசையவே, 'புறப்பட்டது' என்பது 'வெளிவந்தது' என்று பொருள் தரும். "கப்பல் புறப்பட்டது" எனின், அது துறையைவிட்டு வெளியே சென்றது என்பதுவே முதற்பொருள். இப்போது 'புறப்பட்டது' என்றால் அசைந்தது, ஊர்ந்தது, நகர்ந்தது, தோன்றியது என்று பொருள் செய்கிறோம். இதில் தவறொன்றுமில்லை யாயினும் முதற்பொருளின்னதென்பதை நாம் மறக்கலாகாது. புறப்பாடு என்ற சொல் புறப்படுகையை யுணர்த்துவதுடன் உடம்பிலெழும் பரு, கட்டி (Boil) இவற்றையுங் குறிக்கும். இப் பொருளில் அச்சொல்லின் நேரான கருத்து அமைந்திருத்தல் காண்க. நம்மைச் சேராதவரை 'புறத்தியார்' என்று சொல்வது வழக்கு. அகத்தோடு பொருந்தாதவரை யங்ஙனங் கூறுவது ஒக்கும். 'புறத்தியார்' என்பது 'பிறத்தியார்' எனவும் வரும். இரண்

டாவது மொழி 'பிறர்' என்பதுடன் தொடர்புடையது. 'புறத்தியார்' 'பிறர்' என்பவற்றிற்குள்ள கேண்மை தெளிவாய்த் தெரியவில்லை.

இனி, அகம் என்பது வீட்டையும், புறமென்பது வெளியையுமுணர்த்தி ஒன்றிற்கொன்று எதிர்மறையாய் நிற்பதைச் சற்று ஆழ்ந்து நோக்குவாம். வீடும் வெளியும் பார்வைக்கு எதிர்மறையாய்த் தோற்றினும் உண்மையி லவை முரண்படுவன வல்ல. வீடென்பது வெளியிற்றோன்று மொன்றே யன்றி யதனின்றும் வேறுபட்டதன்று. வெளியிலொரு பகுதியில் சுவரெழுப்பித் தடுப்புச் செய்து ஆக்கப்படு மொன்றே வீடென வழங்குவது. உண்மை யிங்ஙனமிருப்ப, எவ்வாறு அது வெளியுடன் முரண் படும்? வெளியைத் தடுப்பதனாலன்றோ மலைக்கு விலங்கென்று பெயர் எழுந்தது. விலங்கென்பது தளை; தளை என்பது கட்டு; கட்டப்பட்டது வீடு. வெளியைக் கட்டி வளைத்து வீடெழுப்புவர். கட்டுதல்=அடைத்தல்; 'நீர் கட்டுதல்' என்பதனானுணர்க. ஆதலின், வெளியின் ஒரு வேற்றுமையே வீடாவதன்றி வேறு தனிப்பொருளன்று. இரண்டும் நிலம், புனல், எரி, வளி, விண் என்பவற்றின் கூட்டமேயாகும். ஆயினும், வெளியிற்கிடையாத ஒரு வகை அமைதியு மின்பமும் வீட்டினுண்டு. இது உடலின் கண் ணமைந்த அகத்திற்கும் பொருந்தும். வாயில், நடை, முற்றம், பள்ளியறை, கூடம், அடுப்பங்கரை, தோட்டம் ஆகிய இவற்றின் சேர்க்கையால் மாத்திரம் ஓரிடம் வீடாகி விடாது. கை, கால், தலை முதலியவை அகமாகா. காதலிருவரின்றி வீடமையாது. இவர்களுள் காதலியே பெரும்பாலும் வீட்டில் திகழ்பவள். காதலியை மனைவி என்றும் இல்லாள் என்றும் தமிழர் கூறுவர்; கணவனை யவ்வாறு கூறார். தன்னினும் ஒருவாறு வேறுபட்டு, அன்பினால் தன்னுடன் ஒன்றாய் இணைக்கப்பட்ட ஒருயிர்த்துணை யில்லாவிடின் அறமேது வீடேது? வெளியிற் றிரிந்து தொழிலியற்றுங் கணவனும் வீட்டிலிருந்து இனிமை செய்யுங் காதலியும் நுகரு மின்பங்களில்லா வீடு வீடாகுமோ? வையக வாழ்விற்கென்று பலவகைத் தொல்லைக் குட்பட்டுழலும் மகன், அன்புடைய மனைவி யுறையுமிடஞ் சேர்ந்ததும் கவலை

நீங்கி யமைதி பெறுதல் இயல்பு. பொருள் தேடுதலினும், தன் நோக்கத்திற்கு எதிராய் நிற்பவரை மேற்கொள்ளுதலினும் ஒருவன் படும் வருத்தங்களும் துன்பங்களும் மனையிலு மவனைப் பின் தொடருமேல் அவ்வுறைவிடம் யாது பயனைத் தரும்? இங்ஙனம் ஒரு மகனுக்கு அமைதி தரும் வீட்டைப்போல் மறுமையில் உயிருக்கு அமைதி தருமொன்றைத் தமிழர் வீடென்றே சொல்வர்.

பொருள் வயிற் பிரிந்த காதலன் வரவை எதிர்நோக்கியுருகி மெலிந்து நெஞ்சு புண்ணுகுந் தலைவியின் தன்மையைக் கூறும் அகப்பாடல்களின் சுவை நனி இனிது. இவ்வகப்பாடல்களில் கருதத்தக்க தொன்றுண்டு. காதலர்களைப்பற்றிப் பிறமொழி மக்கள் எழுதிய நூல்களில் காதலர்களின் தோற்றம் நுண்மையாய் விரித்துரைக்கப்படும். அவர்களது உடையின் சிறப்பு, அணிவகை, உறுப்பமைப்பு முதலியவை ஒவ்வொன்றும் நவிற்சி பெறும். கற்பவர் உளத்தி லக்காதலரின் வடிவம் பதியுமாறு அடிமுதல் முடிவரை யவரைச் சொற்களால் எழுதிக் காட்டுவர். பண்டைத் தமிழ் நூல் வல்லோர் அங்ஙனஞ் செய்யவில்லை. காதலரின் அழகைப் படிப்பவர் வியந்து நோக்கவேண்டுமென்று அவர் விரும்பினரில்லை. அவர் கொண்ட கருத்திற்கு அது பொருந்தாது. புணர்தல், ஊடல், இரங்கல் முதலிய உணர்ச்சிகளையே யவர் கற்பவர் உளத்திற் பெருக்க முயன்றிருக்கின்றனர். ஆதலின் பண்டைத் தமிழ்ப்புலவர் அகப்பாடல்களில் உயிரின் வெவ்வேறு நிலைகளாகிய புணர்தல், இருத்தல், ஊடல், இரங்கல், பிரிதல் என்பவற்றையே பெரிதுங் கருதிப் பாடல்கள் அமைத்தனர் என்பது விளங்கும். அறம், பொருள், இன்பம், வீடு என்பன ஒருவகையில் இம்மையையும் பிறிதொரு வகையில் மறுமையையுஞ் சுட்டுகின்றன. தமிழான்றோர் எப்போது மிரண்டையுங் கூட்டியே நூல் செய்தார். நாம் ஆராயப்புகுந்த வீடு என்ற சொல் இருமைக்கும் பொதுவாதல் நோக்கி இவ்வளவு கூற நேர்ந்தது.

தடுப்புச் சுவரிடிந்தால் வீடு வெளியாகும். கட்டு நீங்கினால் அகம் புறமாகும். அகமாகிய 'நான்' புறமாகிய வெளியிற் கலத்தலைத் தமிழர் வீடு என்பர். வீடு=விடுதலை; விடுதி என்ற மொழி

யையு மாராய்க. வெளி என்பது பெருவெளி, வெட்டவெளி; வெட்டவெளி=இறைவன். வீடு கட்டப்படுமாறே, யாக்கையுங் கட்டப்பட்டதாகும். யாத்தல்=கட்டுதல். அகம் புறமென்றெடுத்துக்கொண்ட இவ்வாராய்ச்சி உயிரையு மிறைவனையுஞ் சுட்டி இரண்டு மொன்றுமாறு காட்டிற்று.

முற்றும்.

தடாதகைப்பிராட்டியார் திருமணம்

(திருவிளையாடல்)

உமையம்மையார் மலயத்துவசனென்னும் பாண்டிய மன்னனுக்குப் புத்திரியாய்ப் பிறந்து அவனுக்குப் பின் தடாதகைப் பிராட்டியார் என்னும் பெயரோடு மதுரைமாநகரிலுள்ளார்க்குத் தாய்போலிருந்து அரசுசெய்துகொண்டிருக்குநாளிலே, அவளுக்குத் திருக்கல்யாணஞ் செய்யும் பருவம் வந்தடுப்ப, அதுகண்டு மாதாவாகிய காஞ்சனமாலைஎம்பெருமாட்டியைநோக்கி, உனக்குக் கன்னிப்பருவம் வந்தும் இன்னமும் விவாகம் இல்லையே என்று, துன்பமுற்றாள். தடாதகைப்பிராட்டி, தாயே! நீ நினைந்த எண்ணம் ஆம்பொழுது ஆகும்; நீ இரங்கவேண்டாம். நான் போய் இப்பூமண்டலத்திலும் எண்டிசைகளிலும் என் வெற்றியை நாட்டி மீளுவேன்; நீ இங்கே இரு என்று கூறி சுமதியென்னும் மந்திரிகளுடனும் நால்வகைச் சேனைகளுடனும் வடதேசத்திலுள்ள அரசர்களை வென்று, பின் இந்திரன் முதலிய திக்குப் பாலர்களை வென்று, திறைகொண்டு, திருக்கைலாயமலையை நோக்கிச்சென்றாள். தடாதகைப்பிராட்டியுடைய படைவீரர்கள் திருக்கைலாய மலையை வளைந்து கொண்டார்கள். அது கண்ட திருநந்திதேவர் கைலாசபதியாகிய சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கி, நிகழ்ந்தனவற்றை விண்ணப்பஞ்செய்தார். பரமசிவன் புன்னகைசெய்து, பினாகவில்லையும் படைக்கலங்களையும் திருக்கரத்தில் எடுத்துக்கொண்டு, இடபவாகனத்தின் மேலேறி யுத்தகளத்திற் சென்றார். அங்கே பெண்சிங்கம்போல நிற்கும் தமது தேவியாருடைய திருவுருவத்தையும் வீரத்தையும் எதிர் கண்

டார். தடாதகைப்பிராட்டியும், ஒருவீரக்கழல் கட்டிய திருவடியும், புலித்தோலுடையும், மழுப்படை யேந்திய திருக்கரமும் திருவெண்ணீறணிந்த உபவீதம் பொருந்திய திருமார்பும், சடாமுடியும், தன்னையே நோக்குகின்ற பெருங்கருணைத் திருநோக்கும், பெற்ற தன்னுடைய வலப்பாதியை எதிர்கண்டாள். கண்ட பொழுது நடுவினுள்ள ஒரு தனம் மறைந்தது. உடனே உள்ளத்தில் நாணமும் மடனும் அச்சமும் உதிக்க, முன்னையன்பு வந்து குடிகொள்ள, அளகம் பிடரியிலே தாழ, கண்கள் புறவடியை நோக்க, தலைகுனிந்து நின்றாள். முன்னுளிலே தோன்றிய அசரீரி வாக்கை அறிந்த சுமதி தடாதகைப்பிராட்டியை வணங்கி நின்று, தாயே! இந்தக் கைலாசபதியே உன்மணவாளன் என்றான். எம்பெருமாட்டி அதுகேட்டு, பேரன்பு பெருக நின்றாள். கைலாசபதி பிராட்டியை நோக்கி, நீ திக்குவிசயத்தின் பொருட்டு எப்பொழுது புறப்பட்டாயோ, அப்பொழுது தொடங்கி நாமும் மதுரையைவிட்டு, உன்னைப் பிரியாது தொடர்ந்து வந்தோம். இதற்கு எட்டாநாளாகிய சோமவாரத்திலே சுபவேளையிலே உன்னை மணஞ்செய்ய வருவோம்; நீ மதுரைக்குப் போ என்று திருவாய்மலர்ந்தருளினார். அது கேட்ட தடாதகைப்பிராட்டி மதுரையை அடைந்து மகளிர்கள் அட்டமங்கலத்தோடும் எதிர்கொள்ளச் சென்று, திருமாளிகையிலே புகுந்தாள். மந்திரிமார்கள் திருக்கல்யாணவோலை எழுதி, எல்லாத் தேயங்களுக்கும் விடுத்து, மதுரை நகரமெங்கும் மணமுரசு அறைவித்து இந்திர லோகமும் காணும்படி சிறப்பித்தனர். சிவபெருமான் தாம் வாக்கருளியபடி பிரமாதி தேவர்களுடன் மதுரைக்கெழுந்தருளி, தடாதகைப்பிராட்டியாரைத் திருமணம் புரிந்தருளினர். அப்போது தேவர்கள் பூமாரி பெய்தார்கள்; அரம்பையர்கள் நடித்தார்கள்; விஞ்சையர்கள் கீதம் பாடினார்கள்; முனிவர்கள் அரகர என்று தோத்திரஞ்செய்தார்கள்; தேவர்கள் உரோமஞ்சிலிர்ப்பப் பரவசரானார்கள்; சிவகணர்கள் சிரசின்மேற் கைகுவித்தார்கள். அங்குள்ளார் யாவரும் திருக்கல்யாண தரிசனத்தாலாகிய பேரின்ப வெள்ளத்தில் மூழ்கினார்கள்.

தமிழ் நிதி

[S. A. திருமலைக்கொழுந்துப் பிள்ளை B.A.]

ஆப்பிரிக்கா தேசத்திய அதிசயங்கள்

க. கரியர் வாழும் பூமியாகிய ஆப்பிரிக்கா அநேக அதிசயங்களைக் கொண்டுளது. சிலவற்றை மட்டுங் கூறுதும்:

குதிரை கொல்லி ஈயென்பதொன்றுண்டு. இவ்ஈ குதிரையைக் கடித்த மாத்திரையானே இரையெடுக்கவோர் சிறிதும் இயலாமல் மூர்ச்சித்து குதிரை இரண்டொரு தினத்தில் மடியும். மற்றைப் பிராணிகளைக் கடிப்பினும் அவை குதிரையைப்போல் மரணமுறுவதில்லை. இங்ஙனம் இந்த ஈ கடித்து மரணமடையாத குதிரை பின்னர் இக் கடியால் அவத்தை யுறுவதில்லை. ஆப்பிரிக்காவில் இத்தகைய குதிரைகளுக்கு விலையதிகம்.

இதுவன்றி, காலாக்கினி எறும்பொன்றுளது. இவ் எறும்புகள் ஒன்றுகூடி வரும்பொழுது ஓர் பிராணியும் எதிர் நிற்கலாற்றது. புலியாயினுஞ் சரி சிங்கமாயினுஞ் சரி எதுவும் இவற்றிற்கு இரையாகிவிடும். இவ் வெறும்புகள் கோடிக் கணக்காய் தேகத்திலேறி பிராணியை என்பும் மிஞ்சாவண்ணம் தின்றுவிடும். இவ் வெறும்புக் கூட்டத்தைக் கண்டால் கிராமத்தார் அனைவரும் ஊரைவிட் டப்பாற் செல்வர். இக் கூட்டம் தொலைந்த பின்னரே ஊருக்குத் திரும்புவர். பின்னர் புசித்தற்கேற்ற பண்டம் ஒன்றும் அவர்க்குக் கிட்டாது தவிப்பர்.

மற்றும், குட்டி மனிதரெனும் மாந்தர் வர்க்கமும் அவண் காணப்படும். இவர்கள் சாதாரண மனிதர் அளவில் பாதியுயரமே வளர்ந்திருப்பர். அறிவு மிகக் குறுக்கம்.

மற்றப்படி யங்கே காணக்கூடிய அரியவை, ஒட்டகத்தையும் சிவிங்கியையும் ஒன்று கூட்டினாற்போன்றவோர் பிராணி, ஒன்று. இது Giraffe எனவும் Cameleopard எனவும் பெயர் பெறும். நீர்க்குதிரை எனப் பெயர்கொண்டவோர் பிராணி பொன்று. இதுவே Hippopotamus. இதன் வாய் திகிலை விளைக்கும். பற்கள் மிக்க விலையுயர்ந்த தந்தங்கள். தீக்கோழியொன்று இதன் இறகு விலையுயர்ந்தது.

நீலநதி வடக்காயோடி எகிப்து நாட்டிற் பாயா நிற்கும். காங்கோவெனும் நதி சாலவும் பெரிது. சாம்பசி என்னும் நதி அதியற்புத அருவிகளை யுடைத்து.

தென்பூமியாகிய ஆஸ்திரேலியாவின் அதிசயங்கள்

உ. தென்பூமியாகிய ஆஸ்திரேலியாக் கண்டம் பலவகைத் தானும் நாம் வாழும் வடபூமிக்கு எறுமாறான தேசம். உத்தராயண காலத்தில் நமக்கு சூரிய வெப்பம் மிகக் கடுமை; அக்காலம் தென்பூமியில் பனி மிகுதி. அங்ஙனமே நமக்கு தக்ஷணாயனமாகும் காலத்தில் நமக்குக் குளிரும் அவண் இருப்பார்க்கு வெப்பமும் மிகுதி.

அன்னப்புள் சாலவும் வெண்மை நிறமுடையதா யிருப்ப ஆங்கோ காக்கையினும் கரியதாயிருக்கும். இத்தகைய காரன் னமே யன்றி, முட்டையிடும் விலங்கும், குட்டிகளைக் காத்தற் கேற்ற பைகளை நெஞ்சிற்கொண்ட ஓர் வகை மான்போன்ற கங்காரு என்னும் பிராணியும் அவண் காணப்படும்.

அவண் உறையும் பூர்விக மாந்தர் 'பூமராங்கு' எனும் வளை கொண் டெறிவதில் மிகவும் வல்லார்.

ஆதியில் அந்நாடு ஆங்கில நாட்டில் பெருங் குற்றஞ்செய்த துட்டரைத் தேச பிரஷ்டஞ்செய்து அனுப்புதற்காக ஏற்பட்டிருந்தது. பின்னர் அங்கே தங்கம் விளைவதுதென்படவே நரக பூமிபோற் றோன்றிய அத்தேசம் சொர்க்க லோகம்போல் மாறியது.

இதற்குத் தென்பால் மாந்தர் வாழ்தற்கு மிக இனிமையான ஓர் த்வீபம் உளது. இதுவே தாஸ்மானியா (Tasmania.)

காதற்ற வூசியும் வாராதுகாணும் கடைவழிக்கே

ங. இவ் வாசகம் எழுதிய முறிவொன்றைக் கண்ட மாத்திரையானே நவகோடி நிதிபடைத்த பட்டினத்தார் சடக்கென யாவற்றையும் உதறிவிட்டுத் துறவுபூண்டார். அவர் உலகிற்குக் கூறிய வுறுதி யாது ?

"பிறக்கும் பொழுதுகொ டுவந்த தில்லை பிறந்துமண்மேல்
இறக்கும் பொழுதுகொ டுபோவ தில்லை இடைநடுவிற்
குறிக்குமிச் செல்வம் சிவந்தந்த தென்று கொடுக்கறியாது
இறக்குங் குலாமருக் கென்சொல்லுகேன் இறைவா கச்சியேகம்பனே."

பெருந்தனம் படைத்தீர், அருளைக் கைவிடாதீர். மமதை கொள்ளாதீர், ஏழைகள்மீது இரக்கம் வைமின். பெரியாரைத் துணைக்கொண்மின்.

அருள் குறுகிய செல்வர்க்கு வரும் அரிய நோய்

௪. பெருத்திடு செல்வமாம் பிணிவந் துற்றிடில்
உருத்தெரி யாமலே ஒளிம ழுங்கிடும்
மருத்துள தோவெனில் வாகடத் தில்லை
தரித்திர மென்பதோர் மருந்திற் றீருமே."

பெருஞ் செல்வமென்னும் நோய் ஒருவனை வந்து பீடிக்குமானால் தன்னைக் காணவரும் பழய சிநேகிதர்களையும் இனங்காணுவண்ணம் கண்ணொளி மழுங்கிப்போம். இந்நோய் தீரும் மருந்து ஏதேனு முளதோவெனின் வயித்திய நூல்களிற் கிடையாது. ஆயின் தீரும்வழி ஒன்றுங் கிட்டாதோவெனின் தரித்திரம் எனும் மருந்தைக் கொடுப்பின் கண்ணிற்கு நல்லொளி திரும்பவும் வரும்.

துரோணாச்சாரியர் தனது சிநேகன் தானேயென நினைந்து துருபதனிடஞ் சென்ற பொழுது அவன் அவரை அவமதித்த விதத்தைப் பாரதத்திற் காண்க.

எளியார்க்கு உபதேசம்

௫. வறுமை எவ்வளவு வாட்டினும் தெய்வத்தை யிகழாது 'இது நாம் முன்செய்த தீவினையின்பயன்' எனக்கருதி பொறுமையாய்த் தாங்குக. பாவமற்ற பட்டினத்தடிகளைக் கழுவிலேற்றப் பார்த்தபொழுது அவர் யாதே கூறினர்? 'பிறப்பதற்கு முன் செய்த தீவினையோ இங்ஙனே வந்து மூண்டதுவே' எனத் தம்மையே நொந்துகொண்டாரல்லரோ?

'என்னினும் மிக்க தாழ்ந்த அறிவும் ஆற்றலுமுடையான் இங்ஙனம் நன்றாய் வாழ நான் கஷ்டத்திலுழல்வது நியாயமா' எனப் பொறாமையேனும் தெய்வநிந்தனையேனும் பிறவாமலிருக்க வேண்டும். எல்லாம் மாய விளையாட்டெனத் தெளிந்து தெய்வம் விட்ட கதிக்கண் அமைக. கடிதில் எதிர்பாராத சுகம் உதயமாகும்.

'மறந்தும் பிறன்கேடு சூழற்க' எனத் தெய்வப் புலவர் கூறியவண்ணம் நெறியல்லா நெறியொழுகி பாவத்திற்கு ஆளாக வேண்டாம். பொய்யுரைத்துப் பாவத்தை மூட்டை கட்டவேண்டாம்.

சிறிதுகாலம் மானத்தை முட்டின்றிக் காப்பின் அருள் தக்கபடி வழி காட்டி நல்குரவை யோட்டும். தரித்திரத்தை ஓர்வகைப் பரீட்சையாகக் கருதி அறத்தின் வழியை விட்டு அகலாது அதன்கண் வெற்றிபெறுக.

நிதியாளர்க்கு உபதேசம்

௧. பிறக்கும்பொழுது தேகத்தையேனும் கொண்டு வந்தோம், இறக்கும்பொழுதோ அதனையும் விட்டு ஓடுகின்றோம். ஆகவே இம் மண்ணுலகில் நமக்கென யாதே பொருள்? எல்லாம் ஈசனதே. 'எல்லாம் உன் உடைமையே, எல்லாம் உன் அடிமையே' என்றனர் தாயுமான சுவாமிகளும். ஊன்றி நோக்கி தற்சுதந்தரமற்று மாயை வயப்பட்ட நமக்கு உடல்தான் சொந்தமாமா? உயிர்தான் சொந்தமாமா. எல்லாம் பொய்யுறவே. ஆதலின், புண்ணியவயத்தால் நமக்கிருக்கும் சம்பத்தால் நாமே மகிழாது நம்மாலியன்ற வுதவியை உறவினர்க்கும் வறிஞர்க்கும் மனமகிழ்ந்து புரிவோமாக.

நிதிச்செருக்கால் வரும் மமதைக்கு ஆளாகாதிருக்கக் கடவோம். வீணான டம்பச் செலவை செய்யாதிருக்கக் கடவோம்.

தெய்வ சிந்தனையை ஓர் கணத்தும் விடாத பரம சாதுக்களைத் துணைக்கொண்டு, காலத்தை நல்வழிக்கண் ஓட்டுவோமாக. அத்தகைய பெரியார் ஒருவரையேனும் ஆதரித்து ஈசனது அ

விற்குப் பாத்திரமாகக் கடவோம். இதனினும் நமக்கு வேறே எதுவே பெருநிதி?

ஜனகர் ஓர் இராஜவிருடி. அவர் யாக்ஞவல்க்க முனிவரைத் தம்மை விட்டகலாத தோழராகக் கொண்டு பிரம விசாரமே காலப்போக்காகக் கொண்டு முத்திக்கு வித்தான விதத்தை மறவாதிருப்போமாக.

பசித்தோர் முகத்தைக் காணலுமே அவர்களை அன்புடன் வரவேற்று பசிப்பிணியை நீக்கக்கடவோம்.

சேற்றிலோடும் பிள்ளைப் பூச்சியைப்போல் எத்தகைய சம்பத்துட் டோயினும் பிரபஞ்ச மாயைக்கண் ஒட்டிக்கொள்ளாது ஒழுகவல்லவனே ராஜயோகியும் ஆவன்.

மகிழ்ச்சிக் குறிப்பு

புதிய ஆண்டிற்கு அரசியலார் தமிழன்பர்கள் சிலர்க்கு அளித்திருக்கும் பட்டங்கள் குறித்துப் பொதுவாக மிக மகிழ்கின்றோம். சிறப்பாக, தமிழ் நாட்டு அமைச்சரும், திருநெல்வேலித் தென்னிந்திய தமிழ்ச் சங்கத் தலைவரும், நமது புரவலருமாகிய சென்னை வளர்ச்சிநெறி யமைச்சர் திருவாளர் திவான் பகதூர் T. N. சிவஞானம் பிள்ளை, B.A., அவர்களுக்கு 'சர்' என்னும் பட்டமும்; தமிழன்பரும், தமிழ்ப் பண்டிதர்களின் பாதுகாவலரும், சென்னை அரசியல் தேர்ச்சியாளரின் அமைச்சரும் ஆகிய திருவாளர் R. கிருஷ்ணராவ் பான்சலே அவர்கட்கு 'இராவ் பகதூர்' என்னும் பட்டமும்; தமிழ்ப் புலவரும் (Retired Veterinary Supdt.) ஆகிய திருநெல்வேலி, வெள்ளகால் திருவாளர் V P. சுப்பிரமணிய முதலியார் அவர்கட்கு 'இராவ் சாகேப்' என்னும் பட்டமும் கிடைத்திருப்பதுபற்றி நாம் மிக மகிழ்கின்றோம். இவர்கள் இன்னும் நீடுவாழ்ந்து பெரும் பட்டங்கள் பெற்றுத் தமிழுக்கும் தமிழ்மக்கட்கும் 'தமிழ் நாட்டிற்கும் வேண்டுவன செய்து அழியாப் பெரும்புகழ் எய்துமாறு எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

சித்தாந்த நூற்பதிப்புக்கழக ஆதரவில் நடைபெற்றுவரும்

திருநெல்வேலி,

தென்னிந்திய சைவசித்தாந்த சங்கம்

இச் சங்கத்தாரால் மூன்றுவது ஆண்டாக நாளது குரோதன வருடம் 1101-ம் ஆண்டு ஐப்பசித் திங்கள் 15, 16-ஆந்

தேதிகளில் (31உ அக்டோபர், 1உ நவம்பர், 1925) திருநெல் வேலி, தூத்துக்குடி, ஓட்டப்பிடாரம், நாகர்கோயில், திருவனந்த புரம், தஞ்சாவூர் முதலிய இடங்களில் நடத்திய திருக்குறள், சமயபாடம், பெரியபுராணம் முதலிய பரிசுப்பரீட்சை களிற் றேர்ந்தவர்களின் பெயர் முதலியன நாளது தைத் திங்கள் வெளிவரும். 'செந்தமிழ்ச் செல்வி'யின் நான்காம் தொகுதி முதல் இதழில் வெளியிடப் பெறும். அதற்குரிய பரிசுகளும். தேர்ச்சி இதழ்களும் வருகிற ஜூன்மீ நடைபெறப்போகும் நமது சங்க ஆண்டு விழாவிற் கொடுக்கப்படும். சென்ற 2-வது ஆண்டை விட இவ்வாண்டில் இருமடங்கு அதாவது 152 மாணவர்கள் மனுச் செய்திருந்தார்கள். வராமலிருந்தவர்கள் மிகச் சிலரே. வருகிற ச-வது ஆண்டுப் பரீட்சைக்கு இன்னும் நூற்றுக்கணக் கான அன்பர்கள் வருவார்களென்று தெரிந்து மகிழ்கின்றோம்.

தென்னிந்திய தமிழ்ச் சங்கம்

திருநெல்வேலி

தலைவர் : **சர். T. N. சிவஞானம் பிள்ளையவர்கள்** B.A. M.L.C.
சென்னை வளர்ச்சிநெறி யமைச்சர்.

பரீட்சைக்குரிய பாட முறைகள் முன்னமே 'செந்தமிழ்ச் செல்வி' 3-வது தொகுதி 7, 8-ம் இதழ்களில் வெளிவந்திருக் கின்றன.

இத் தென்னிந்திய தமிழ்ச் சங்கத்தார் ஏற்படுத்தியிருக்கும் தமிழ்த் தேர்வு(Entrance or Matric) இளந்தமிழ்ப்புலவர் (F.A.)தமிழ்ப்புல வர் (B.A.) சிறப்புப் பட்டத்திற்குரிய பாடப் பகுதி (B. A. Honours' Course) முதலிய தேர்வு முறைகளுக்குரிய பரீட்சைகள் திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, சிதம்பரம், சென்னை, திருவனந்த புரம் ஆகிய ஐந்து நகரங்களிலும், பதின்மருக்கு மேல் விண்ணப்பங்கள் இருக்குமானால் முக்கியமான பிற இடங்களிலும் 1926 ஜூன்மீ 28, 29, 30-ந் தேதிகளில் நடத்தப்படும்.

எண்.	தேர்வுப் பாடம்.	மாதம்.	நாள்.	பகல்.	அம்சம்.
க.	இலக்கணம்.	ஜூன்.	முதல் நாள்.	10-1, 2-5.	100, 100.
உ.	இலக்கியம்.	,,	உ-ம் நாள்.	10-1, 2-5.	100, 100.
௩.	வசனம்.	,,	௩-ம் நாள்.	10-11½	75.
ச.	வியாசமெழுதல்.	,,	௩-ம் நாள்.	12-1½	75.
ரு.	செய்யுளியற்றல்.	,,	௩-ம் நாள்.	2½-4½	50.

இப்பரீட்சைவிஷயத்தில் மொத்தத்தில் 100-க்கு 60 எண்கள் வாங்குவோர் முதல் வகுப்பினர். 100-க்கு 50-க்குமேல் 60வரை வாங்குவோர் இரண்டாம் வகுப்பினர். 100-க்கு 40-க்குக் குறையாமல் வாங்குவோர் மூன்றாம் வகுப்பினர். இம்முறை எல்லா வகுப்புத் தேர்வுக்கும் உரித்து. தேர்ச்சிக்குத் தகுதியாவார் ஒவ்வொரு பாட வகையிலும் 100-க்கு 25-க்குக் குறையாமல் எடுக்கவேண்டும்.

மேற்படி தேர்வுகளில் தேர்ந்தவர்கள் யாவர்க்கும் சங்கத்தாரால் தேர்ச்சி இதழ்கள் தலைவரவர்கள் கையெழுத்துடனும், சங்க முத்திரையுடனும் அனுப்பப்பெறும். தேர்வுகளிற் றேர்ந்தவர்கள் விவரம் 'செந்தமிழ்ச் செல்வி' முதலிய இதழ்களில் வெளியிடப்பெறும்.

எண். தேர்வு	முதற் பரிசு.	இரண்டாம் பரிசு.	மூன்றாம் பரிசு.
1. தமிழ்த் தேர்வு. (Entrance or matic.)	50 ரூபாய் பெறத்தக்க தங்கப்பதக்கம்.	30 ரூபாய் பெறத்தக்க வெள்ளிப் பதக்கம்	20 ரூபாய்
2. இளந்தமிழ்ப் புலவர் (F.A.)	75 ரூபாய் பெறத்தக்க தங்கப்பதக்கம்	50 ரூபாய் பெறத்தக்க தங்கப் பதக்கம்	30 ரூ. பெறத்தக்க வெள்ளிப் பதக்கம்
3. தமிழ்ப்புலவர். (B.A. & B.A. Hons)	100 ரூபாய் பெறத்தக்க தங்கத்தோடா	75 ரூபாய் பெறத்தக்க தங்கப் பதக்கம்	50 ரூ. பெறத்தக்க தங்கம் பதக்கம்

தமிழ்த் தேர்வு முறைக்கு ரூபாய் ஒன்றும், இளந்தமிழ்ப் புலவர் தேர்வுக்கு ரூபாய் இரண்டும், தமிழ்ப் புலவர் தேர்வுக்கு ரூபா மூன்றும் சிறப்புப்பாடங்களாகிய (1) காப்பியம் (2) நீதிநூல் (3) சங்க நூல் (4) இலக்கணம் (5) சமய நூல் (a) சைவ சித்தாந்தம் (b) வைணவ சித்தாந்தம் வகை 7-க்கும் ஒருவரே ஒரே முறையில் பல சிறப்புப் பாடப் பகுதிப் பரீட்சைக்கு வருவதானாலும் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி செலுத்த வேண்டிய கட்டணத் தொகை ரூ. 3 ஆகும். இத்தொகை விண்ணப்பத்துடன் ஒவ்வொரு ஆண்டும் சித்திரைத் திங்கள் முதல் தேதிக்குமுன் சங்க அமைச்சர் விலாசத்துக்கு அனுப்பப் பெறவேண்டும்.

தேர்வுக் காலங்களிற் பெண்பாலர்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்து கொடுக்கப்பெறும்.

பரீட்சை விண்ணப்பப் பாரங்களும் பாட முறைகளும் வேண்டுவோர் மேற்படி சங்க அமைச்சர் அல்லது சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத் (லிமிடெட்) தாருக்கு ஒரு அணா தபாற்றலை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

இதன் சம்பந்தமாக ஏதேனும் தெரிந்துகொள்ளவிரும்புவோர் சங்க அமைச்சருக்கு ரிப்ளைப் போஸ்ட் கார்டு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

அமைச்சர், தென்னிந்திய தமிழ்ச்சங்கம்.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக மேடை,
கீழரதவீதி, திருநெல்வேலி.

Printed by Sivakami Vilasam Press: Published by V. Subbiah,
for The S. I. S. S. W. P. Society, Ltd. Madras.